Registered as a Newspaper

தரமான
✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட் ஆடைகள்
சின்னஞ்சிறுர்களின் சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22 A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இம்போட்டற் நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன் பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ் வகைகள்
கிறவுண்ஸ்
22 A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஷு ஆனி மீ 26 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 25 ( 10 07 - 1988 ) UTHAYAN - A lively Tamil Daily கதிர்: 127

# முல்லைத்தீவு, வவுனியாவுக்கு சர்வதேச பிரதிநிதிகளை அனுப்பக் கோரிக்கை

## வீரமணி, நெடுமாறன் அறிக்கை

— சென்னையிலிருந்து தி. மேனகன் —

சென்னை, ஜூலை 10

முல்லைத்திவு, வவுனியாப் பகுதிகளில் உண்மையில் என்ன நடைபெறுகின்றது என்பதை வெளியுலகிற்கு வெளிப்படுத்துவதற்காக, சர்வதேச பிரதிநிதிகளையும் மற்றும் இந்திய, சர்வதேச பத்திரிகையாளர்களையும் அங்கு தாராளமாகச் சென்றுவர இந்திய அரசு அனுமதிக்க வேண்டும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் இப்பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை அவதானிக்கவும் இந்திய அரசு இணக்கம் தெரிவிக்க வேண்டும்.

திராவிடர் கழகத் தலைவர் திரு. கி. வீரமணி, தமிழ் நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் ஆகிய இருவரும் கூட்டாக விடுத்த அறிக்கையில் இப்படிக் கோரியிருக்கின்றனர்.

முல்லைத்திவுப் பகுதியில் பொதுமக்கள் துன்புறுத்தப்படுவதாகவும் விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் சுடப்படுவதாகவும் தாக்கப்படுவதாகவும் செய்திகள் வந்துள்ளன, இந்திய இராணுவம் அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு மக்களை மிரட்டுவதாகவும் சொல்லப்படுகிறது.

ஆனால் இச்செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என இந்திய அரசு தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது.

ஆகவே சர்வதேச பிரதிநிதிகளை முல்லைத்திவு, வவுனியாப் பகுதிகளுக்குச் செல்ல இந்தியா அனுமதிக்க வேண்டும். ஆனால் அதற்கு அனுமதி வழங்க இந்தியா மறுக்கிறது. ஆகவே தனது செயற்பாடுகளை மூடி மறைக்கவே இந்தியா முயல்கிறது என்பது தெளி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜீ. சி. ஈ. பரீட்சை அமைதியாக நடந்து முடிந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 10

விசேஷ ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை அமைதியான முறையில் நேற்றுடன் நடந்து முடிந்தது.

கடந்தவருடம் டிசம்பர் மாதம் நடைபெற இருந்தது. தடைப்பட்ட இப்பரீட்சை விசேஷ பரீட்சையாக கடந்த முதலாம் திகதியிலிருந்து நேற்றுவரை நடைபெற்றது.

இப்பரீட்சை யாழ் குடாநாட்டில் 152 பரீட்சை நிலையங்களிலும், முல்லைத்திவில் 12 பரீட்சை நிலையங்களிலும், பளையில் 4 பரீட்சை நிலையங்களிலும் நடைபெற்றது. (இ-5-9)

## முல்லைத்தீவிலும் நிர்வாகச் சீர்குலைப்பு

வவுனியா, ஜூலை. 10

இலங்கை அரசாங்கத்தின் சிவில் நிர்வாக அமுலாக்கல் முயற்சியை முறியடிக்கும் விதத்தில் முல்லைத்திவு மாவட்டத்திலும் சிவில் நிர்வாகத்துக்கு விடுதலைப்புலிகள் கட்டுப்பாடு விதித்துள்ளார்கள்.

சகல அரச திணைக்களங்களுக்கும் எழுத்து மூலம் விடுக்கப்பட்டுள்ள இந்த அறிவித்தலில், மாதத்தில் முதலாவது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## துருப்புகள் குவிப்பு

ஒட்டுசுட்டான், ஜூலை, 10

முல்லைத்திவு மாவட்டத்திற்கு மேலும் இந்தியத் துருப்புக்கள் அனுப்பப்பட்டிருப்பதாக அறியவந்துள்ளது.

வன்னி மாவட்டத்தில் இந்தியப்படையினர் மேற்கொள்ளும் "ஒப்பரேஷன் செக்மேற்" நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துவதற்காகவே துருப்புகள் மேலதிகமாக அங்கு அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

துருப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதால் வன்னிக் காட்டுப் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது (உ-113)

## கண்ணி வெடி! இராமநாதபுரத்தில் படையினர் சூடும் தேடுதலும்

யாழ்ப்பாணம், ஜூலை 10

கிளிநொச்சி, இராமநாதபுரம் பகுதியில் நேற்று நிலக்கண்ணிவெடிச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. பெரிய சத்தத்துடன் நிலக்கண்ணி வெடி கேட்டதாகச் சொல்லப்பட்டது.

நிலக்கண்ணி வெடியில் வாகனம் எதுவும் சிக்கியதா இல்லையா என்ற தகவல் எதையும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

எனினும் நிலக்கண்ணி வெடித்ததைத் தொடர்ந்து இந்திய அமைதிப் படையினர், சுற்றுடலில் பலத்த தேடுதலும் துப்பாக்கிப் பிரயோகமும் செய்ததாக அறிய வந்தது.

படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்தத்தை இந்தியா இன்னும் தாமதிப்பது ஏன்?

## ஈரோஸ் பாலகுமார் கேட்கிறார்

யாழ்ப்பாணம் ஜூலை 10

விடுதலைப் புலிகள் உட்பட சகல தரப்பினரும் போர்நிறுத்தத்திற்குத் தயாராகியுள்ள நிலையில், போர்நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கு இந்தியப்படையினர் இன்னும் தாமதித்துவருவது ஏன்?

— இவ்வாறு கேள்வி எழுப்பினர் ஈரோஸ் இயக்கப் பிரமுகர் திரு. வே. பாலகுமார். உதயனுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இக் கேள்வியை எழுப்பினர்.

"தற்போது நடைபெற்றுவருவதாகக் கூறப்படும் பேச்சுவார்த்தைகள் உண்மையில இறுதியான ஒருமுடிவை நோக்கிச் செல்கிறதா என்பதும் எமக்குச் சந்தேகமாகவே உள்ளது" என்றும் அவர் சொன்னார்.

திரு. பாலகுமார் தமதுபேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

பேச்சுவார்த்தை முடிவுபெறுமல்இழுபடுவதற்கு என்னகாரணம் இருந்தாலும் ஈரோஸைப் பொறுத்தவரை—

எம்மக்கள் படும் துன்பத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காவது இந்தியப் படையினர் உடனடியாகப் போர் நிறுத்தப் பிரகடனம் செய்ய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

வேண்டுமானால் யுத்த நிறுத்தத்திற்குப் பின்னர் விடுதலைப் புலிகளுடன் இந்திய அரசு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தொடரும் இயக்க மோதல்கள்

வவுனியா கோவில் குளம்மாத்தறை பாஸ் சந்தியில் நேற்றுகாலை இரு இயக்கங்களுக்கு இடையில் கடும்மோதல் மூண்டது.

இருபகுதியினரும் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சுமார் அரைமணித்தியாலயம் இடம்பெற்ற இம்மோதலின் சேத விவரங்கள் குறித்து உடனடியாக எதுவும் தெரியவில்லை.

தெய்வாதீனமாக இச்சுற்றாடலில் இருந்த பொதுமக்களுக்கு காயமோ, உயிரிழப்போ ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமையும் இறம்பைக்குளத்தில் இயக்க மோதல் ஒன்று நடைபெற்றதும், அதில் இரண்டு இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதும் தெரிந்ததே. (இ-161)

## யுத்த நிறுத்தமின்றி சந்திப்புக்கு இடமில்லை

### விடுதலைப்புலிகள் பிரமுகர் கருத்து

ஐந்து நாள் யுத்த நிறுத்தம் ஒன்றை இந்தியா பிரகடனப்படுத்தாவிட்டால், இந்தியத் தரப்பினர் சென்னையில் இருந்து அழைத்துவரும் விடுதலை புலிகள் பிரதிநிதியையோ அல்லதுதாதுவரையோ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் சந்திக்கமாட்டார்.

காண்டீபன் எனத் தம்மை இனம்காட்டிக் கொண்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் வவுனியாவிலிருந்து தொலைபேசி மூலம் இதனைத் தெரிவித்ததாக கொழும்பு 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டது.

சென்னையிலிருந்து வரும் தூதருடன் அப்படியான சந்திப்பு ஒன்று நிகழ்வதற்கு முன்னர் வாய்ப்புகள் இருந்தன. ஆனால் இந்தியத் தரப்பினர் "ஒப்பரேஷன் செக்மேற்" நடவடிக்கையை ஆரம்பித்து தீவிரப்படுத்தியிருப்பதால் இப்போது போரிடுவதைத் தவிர எமக்கு வேறு மார்க்கம் இல்லை.

இத்தகைய சந்தர்ப்பத்தில் இரகசிய சந்திப்பொன்றை நிகழ்த்துவதற்கு விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் தயாரில்லை.

இப்படி திரு. காண்டீபன் கூறியதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

## முச்சந்தி முரளி



அனுராவும், ஜே. ஆரும். பேசிக் கதைச் செல்லோ கருத்து வெளியிடுகினம் போலை...... இரண்டு பேரும் ஒத்து ஊதுமாப் போலையும் கிடக்கு... இல்லையே.....?

## சுபநேரம்

10 - 7 - 1988
ஆனி 26
ஞாயிற்றுக்கிழமை

சுபநேரம்:
8-59 முதல் 10-29 வரை

ராகுகாலம்:
04-29 முதல் 05-59வரை

இவை பாலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
வைஷ்ணவ ஏகாதசி

## சு. க. தலைமையில் ஜே.வி.பி. அணி திரள வேண்டும்

### அநுராபண்டாரநாயக்கா கோரிக்கை

கொழும்பு, ஜூலை 10

சுதந்திரக் கட்சி தலைமையில் மக்கள் விடுதலை முன்னணியினர் அணி திரளவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா கிட்டுல்ஹிட்டியாவ என்னுமிடத்தில் நடந்த தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர்மேலும் சொன்னதாவது:

இந்த ஆண்டு அக்டோபரில் நடைபெற உள்ள போதுத்தேர்தலிலும் டிசம்பரிலும் நடைபெறவுள்ள ஜனதிபதி தேர்தலிலும் சுதந்திரக் கட்சி வெற்றியீட்டுவதை யாரும் தடுக்கமுடியாது.

சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்தவுடன் இந்திய அமைதிப்படை திருப்பி அனுப்பி வைக்கப்படும்இந்திய-இலங்கைஒப்பந்தம் ரத்துச் செய்யப்படும்; மாகாணசபைகள் கலைக்கப்படும்; மக்கள் விடுதலை முன்னணியின் முற்போக்குக் கொள்கைகளையும் சுதந்திரக் கட்சி அரசு அமுல் நடத்தும். [உ-எ]

## சுதந்திரக் கட்சி மீது கடும் நடவடிக்கை

### ஜெயவர்த்தன மிரட்டல்

கொழும்பு, ஜூலை 10

மக்கள் விடுதலை முன்னணிக்கு சுதந்திரக்கட்சி தொடர்ந்து ஆதரவளித்து வருமானுல் அதன்மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டிவரும் என்று ஜனதிபதி ஜெயவர்த்தன எச்சரித்திருக்கின்றார்.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு பேசுகையில் திரு. ஜெயவர்த்தன இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

ஜே. வி. பியை ஆதரிக்கும் கொள்கையை சுதந்திரக்கட்சி தொடருமானுல் அக்கட்சி மீது தகுந்த நடவடிக்கையை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்ருேல், டீசல் வந்து சேர்ந்தன!

யாழ்ப்பாணத்துக்கு நேற்று பெற்ருேல், டீசல், மண்ணெண்ணை ஆகிய எரிபொருள்கள் வந்துசேர்ந்தன.

இதனையடுத்து மக்கள் இன்றுமுதல்எரிபொருள் நிலையங்களில் எரிபொருள்களை வழமையான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

45 ஆயிரம் லீற்றர் பெற்ருேலும், 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணையும், 90 ஆயிரம் லீற்றர் டீசலும் நேற்று யாழ். பெற்ருேலியக் கூட்டுத்தாபனத்துக்கு வந்து சேர்ந்தன.

## திருமண அழைப்பு

வேலணை மேற்கு தர்ஷினி பதி வாழ்
திரு. அ. சுந்தரம் தம்பதிகளின்
புதல்வன் திருவளர் செல்வன்
லோகநாதன் (கனடா)
அவர்களுக்கும்
வேலணை 5 மத்திய கல்லூரியடி
திரு. வே. தாமோதரம் தம்பதிகளின்
புதல்வி திருவளர் செல்வி
மனேகரி
அவர்களுக்கும்
நிகழாண்டு ஆனி 26 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (10-07-1988) பிற்பகல் 6.09 மணிக்கும் 6.49 மணிக்கும் இடையில் உள்ள சுபவேளையில் மணமகளில்லத்தில் மங்கலநாண்பூண் மணவினை விழா நடைபெறும்.
உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இருவீட்டாரும் அழைக்கின்றனர்
(5013)

ELECTRO - REF - COOL ENGINEERS
T. V.-Deck-Computer Repairing,
Aircondition Refrigerator Repairing,
Audio - Vedio Recording.
Branch :
Kokuvil Junction, Kokuvil. Anaicoddai Junction, Anaicoddai.
வடமாகாணத்தின் பிரபல தொழில் அதிபர்
திரு. க. கனகராஜா, J. P.
அவர்களால் மங்கள விளக்கேற்றி திறந்து வைக்கப்படும்.
இடம்: ஆனைக்கோட்டை சந்தி அருகாமை
காலம்: 11-7-88 திங்கட்கிழமை
நேரம்: நண்பகல் 12-00 மணி
அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவரையும் வந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேம். (5210)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Prima Lohmann வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு சேவல் குஞ்சுகள் Hy-Line வெள்ளை கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன்முன் கூட்டியே பதிவு செய்யவும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (C5626)

GOLDI Sausages எல்லாவகையான Sausages மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சழிவு தரப்படும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C.5624]

ஆண்கள் 18'', 22'' ஏசியாவும் 22'', ஈஸ்டேன் பைசிக்கிள்ஸ் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 339 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (5018)

அச்சகத்திற்குரிய கட்டிங் மெசின் (Cutting Mechine) விற்பனைக்கு உண்டு. வேலைநாட்களில் பார்வையிடலாம். தொடர்பு ஆசிர்வாதம் அச்சகம் 50, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (5016)

அராலி வடக்கு சேர்ச்சிற்கு அருகில் 3 பரப்புக் காணியும்வீடும் மின்சார வசதியுடன் விற்பனைக்கு உண்டு அதனுடன் சேர்ந்த 3 பரப்புக்காணியும் 2 கடைகளும் 3 இணைப்பு மின்சாரத்துடன் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். மு. மாணிக்கம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. (4559)

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி தாளையடியில் நல்ல சூழலில் சகல வசதியும் கொண்ட 1½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- N. மகேஸ்வரன், பெரியபுலம் மகா வித்தியாலயம், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (4971)

மாங்குளத்திற்கும் கனகராயன் குளத்திற்கும் இடையில் கண்டி ரோட்டில் மாங்குளத்தில் இருந்து இரண்டு மைல் தூரத்தில் காணி 5 ஏக்கர் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கணேசன் C/O பூபால பிள்ளை கடை, அளவெட்டி வடக்கு. (4969)

வீடுகட்ட உகந்த 3 பரப்புக்காணி வட்டுக்கோட்டைஇந்துக்கல்லூரிக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. தியாகராசா நில அளவையாளர் 528/2, K. K. S ரோட், (தட்டாதெருச் சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம், (4997)

உரும்பராயில் பிரதான வீதியில் கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் சகலவசதிகளுங்கொண்ட 4½ பரப்புக் காணி உடனடி விற்பனைக்குண்டு. தொடர்பு முகவரி:- 1. உடையார் ஹவுஸ் உரும்பராய் வடக்கு உரும்பராய்; 2. 45, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். (4989)

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலைக்கு அண்மையாக ஒரு வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- J. P. T Ltd 3, நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம். (4990)

### இறைச்சி கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி 5625)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Upland Farmகூடிய சீக்கிரத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையும் Lohmann பிறவுண் சேவல் குஞ்சுகள் 9-7-88 சனிக்கிழமையும், 13-7-88 புதன் கிழமையும் குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க இல. 9, கந்தையா லேன், (குருவத்தை ரோட்) சுன்னுகம் புகையிரத நிலையத்திற்கு அண்மையில். (4975)

பேட்டுக் குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் புரோயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன் கொக்குவில். மயூரா பாம் விற்பனை நிலையம் முன்பாக சாவகச்சேரி, மகேஸ்வரி ஹோட்டல் முன்பாக கரடிப்போக்கு பாலத்தடி, கிளிநொச்சி. (4885)

### வீடு வளவு விற்பனை

மானிப்பாய் வீதியில் (யாழ்மாநசரசபை எல்லைக்குள்) சகல வசதிகளும் கொண்ட இரண்டு பரப்புக் காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- K. கதிர்காமநாதன், அரஸ்ரெக்ஸ், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (4984)

### விற்பனை T V - மோட்டார் சைக்கிள்

எங்களிடம் C/50, C/70, C/90, Honda மோட்டார் சைக்கிள்கள், Sony Tv 2032, 2072, 2092 வீடியோ டெக் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இல 37 (98) ஜின்னு ரோட், யாழ்ப்பாணம். (4981)

## தேவை

ஆங்கிலம் தட்டெழுத்து அனுபவம் உள்ள Ad/Levl பரீட்சையில் கணிதத்தில் திறமைச் சித்திபெற்ற பெண் கணக்காளர் Account Clerk உடன் தேவை. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களாயின் விரும்பத்தக்கது. தொடர்பு இலக்கம் 274, C/o உதயன் யாழ்ப்பாணம். (4993)

யாழ் நகரில் இருக்கும் பான்ஸி ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள ஆண் விற்பனையாளர் ஒருவர் தேவை. யாழ் நகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது: தொடர்பு கொள்ள வேண்டியது. இல 275 C/o உதயன் யாழ்ப்பாணம். (4994)

### தையல் வேலைக்கு பெண்கள் தேவை

யாழ் நகரில் அமைந்திருக்கும் எமது ஸ்தாபனத்திற்கு ''தையல்'' வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. நேரில்தொடர்பு கொள்ளவும். தினமும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை ''அஜன் தாஸ்'' 54, பெரியகடை, யாழ்ப்பாணம். 4982

### Sales Girls தேவை

Sales Girls ஆகக் [illegible] முள்ள பெண்கள் தேவை. 12-07-88க்கு காலை 9 மணி முதல் 11 க்கு இடையில் நேரில் வரவும் - தொடர்பு மெடிக்கல் ஹோல், 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C/5725)

### வீடு தேவை

யாழ்மாநகர சபை எல்லைக்குள் சுண்டிக்குளிப் பகுதியில் ஒரு வீடு தேவை. தொடர்பு:- J. P. T Ltd, 3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (4991)

### உடனடித் தேவை

அனுபவம் உள்ள 'Spray Painter' (ஸ்பிறே பெயின்ரர்) உடனடியாகத் தேவை. தொடர்பு:- Dun Frost 21, ரெம்பிள் ரோட், (Temple Road) சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (4976)

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் தொழில் புரியும், இந்துவேளாளர் குலத்தைச் சேர்ந்த 5 அடி உயரமுள்ள மணமகனுக்கு 25-35 வயது இடைப்பட்ட நற்குணமுள்ள படித்த மணமகள் தேவை. சாதகம், குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்: 273 C/o உதயன் யாழ்ப்பாணம். (4985)

### லோன்றிக்கு ஆள் தேவை

லோன்றிக்கு வேலை செய்வதற்கு நன்கு அனுபவம் உள்ள சலவையாளர், அயன்பண்ணுபவர் உடனடியாகத் தேவை. தங்குமிட வசதியுண்டு, நேரில் வரவும். தொடர்பு: ''நியூ பத்திமா றைகிளீனேஸ்'' நவீன சந்தை (மேல்மாடி) சாவகச்சேரி. (4966)

### துவிச்சக்கர வண்டியை காணவில்லை

ஸ்ரான்லி வீதியில் 07-07-88 அன்று 4மணி அளவில் இல. 9268084 Hero துவிச்சக்கர வண்டி காணுமல் போய் விட்டது. இதனைப்பற்றிய தகவல்கொடுப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு:- S.K ஏஜென்சி, 128/D மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். (4987)

### உயர்தர மாணவர் மீட்டல் பௌதிகம்

வெளிவந்து விட்டது! விற்பனையாகின்றது சகல புத்தகசாலைகளிலும். மீட்டல் செய்வதற்கு ஒரு சிறந்த கைநூல்- A/L இறுதிச் சோதனைக்குத்தோற்றும் மாணவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். ஒளியியலும், ஒலியியலும், வெப்பவியல், மின்னியல், சடப்பொருளின் இயல்புகள் ஆகியவற்றை எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (4988)

### புவியியல் நூல்கள்

A/L வகுப்புக்குரிய அபிவிருத்திப் புவியியல் எறியங்கள் இரண்டினதும் புதிய பதிப்புகள் வெளிவந்துள்ளன, ஆக்கியோன் க. குணராசா. பிரபல புத்தகசாலைகளில் பெறலாம், இலங்கைப் புவியியல் விரைவில் வெளிவரும். (4580)

### TYPE WRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்தமுறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road, Jaffna, Samy & Co Shabra அருகாமையில். (C5300)

## வாடகைக்கு

கோண்டாவில் சந்தி பலாலி வீதிக்கு அண்மையில் சகல வசதியும் உடைய 3 அறைகள் கொண்ட ஒரு வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: த. கனகசபை 7, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (5015)

### புதிய A/L வகுப்பு

A/L '90' மாணவர்களுக்கு கலை வர்த்தக பாடங்கள் மட்டும் ஆரம்பம்: 11-7-1988 பி. ப. 3 மணி Modern Education Centre Karaveddy. (4893)

### A/L 90 இரசாயனம் ஆரம்பம்

ஆசிரியர் சத்தீஸ் 108, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் ''A/L 90'' ''இரசாயனம்'' பிரிவு I ஆரம்பம் திங்கள் (11-7-88) 6.30 காலை. பிரிவு II ஆரம்பம் திங்கள் (11-7-88) 5.00 மாலை. விபரங்கள் நேரில் (4965)

### கல்வி

1988 டிசெம்பரில் நடைபெறவுள்ள G. C. E (O/L) ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை புதிய திட்டத்திற்கமைய ஒப்படைவுகளும், பழைய திட்டத்திற்கமைய சகல பகுதிகளையும் 20 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் 2 மாதத்திற்குள் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு வீடுகளில் சென்று கற்பிக்கப்படும். மற்றும் Spoken English மற்றும் சகல பாடங்களும் பட்டதாரி ஆசிரியர் ளினால் கற்பிக்கப்படும். நேரம் 6 — 8, மாலை 2 — 3 ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (4978)

### தவறிவிட்டது

திலகவதி அருணசலம் ஆகியஎனது518192396V இலக்கமுடைய அடையாள அட்டைதெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயிலில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். (5003)

விஸ்வலிங்கம் விக்கினேஸ்வரன் ஆகிய எனது அடையாள அட்டையும், (166969) லைசென்ஸும், சாவிபாஸ்சம் சாவகச்சேரிக்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (5021)

### பயிற்சிகள்

Radio T. V Air Conditioning Refrigeration வயறிங் வெல்டிங் மோட்டர் மெக்கானிசம் வைன்டிங் தட்டெழுத்து சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. அனுபவமுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கடும் Vispa Engineering Aid Hall, 328 நாவலர் ரோட் ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம். (5010)

### மூலவள நிலையம் மீண்டும் இயங்கும்

யாழ்ப்பாணம் ஜூலை 10

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயத்தில் இதுவரைகாலமும் இயங்காத நிலையில் இருந்த மூலவள நிலையம் மீண்டும் இயங்கும்.

இதற்கான முயற்சியை பிரஸ்தாப பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மேற்கொண்டுள்ளது. (இ-9)

### பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

காங்கேசன் துறை, ஜூலை 10

தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கத்தின் ஆதரவில் இயங்கும் பாலர் பாடசாலைகளின் மாணவர்களின் விளையாட்டுப் போட்டி இன்று 10ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெறும் விளையாட்டுப் போட்டியில் காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன பதில் முகாமையாளர் திரு. எஸ். ஜெயக்குமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-68)

## வேலை வாய்ப்பு

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் G. C. E (O/L) பரீட்சையில் 2 திறமைச் சித்தி (கணிதம், பாஷை ஆகியவற்றில்) உடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 25-07-88க்கு முன் கிடைக்கக் கூடியதாக இயக்குநருக்கு அனுப்பப்பட வேண்டும்.

1. Motor Re Winding— பயிலுநர்கள்
2. Fitter General— ''
3. Moulder= ''
4. Mechanics.
5. Auto= Electriciens.

**அனுபவம் வாய்ந்தவர்களுடைய விண்ணப்பங்கள் மேற்கூறிய தகுதி இல்லாவிடினும் பரிசீலிக்கப்படும்,**

**சம்பளம்:**

தகுதி, அனுபவம், திறமை என்பனவற்றிற்கு இணங்க தீர்மானிக்கப்படும்.

பகுதி நேர வேலைக்கும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

DIRECTOR
**NAVASATHTHEI**
Industries & Engineering Services
DURGAPURAM
TELLIPPALAI.

குறிப்பு,
பழுதடைந்த, பாவிக்கமுடியாத வீட்டு மின்சார உபகரணங்கள், (Fan, Motor, Mince' Blundres) நியாய விலைக்கு வாங்கப் படும்- (5217)

## 1ஆம் ஆண்டு நினைவு



மலர்வு: 22—4—1919

உதிர்வு: 10—07—1987

**திரு. இராயப்பு இராஜரெட்டினம்**
**(நெஞ்சம் மறப்பதில்லை நெஞ்சமதில் நினைத்திருப்போம்)**
**அன்பின் இறைவா!**

அன்புமணம் வீசி, பரிவு காட்டி அரவணைத்து தன் நிழலிலே எம்மை எல்லாம் ஒன்றாகத் தங்கவைத்து எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி மறைந்து விட்ட எம் தந்தை இராயப்பு இராஜரெட்டினம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அவரின் ஆத்ம இளைப்பாற்றிககாக ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் 10-7-88 ஞாயிற்றுக்கிழமை 7.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பழைய வீதி
ஆனைக்கோட்டை.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்

(5023)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இரட்சிப்பு: 12 - 8 - 1900

ஆசீர்வதிப்பு: 18 - 6 - 1987

அன்புடன் பண்பாக தம்மை ஆளாக்கி உம்முயிர் எம்முடன் உறிற்ற வேளையில் உறைந்தனையே,

ஆண்டவனிடம் நினைவு கூரும்,
**மகன்மார், பேரப்பிள்ளைகள்.**

R. சண்முகம்,
60/2, திருவையாறு,
கிளிநொச்சி. (5017)

## நீம்ஸ் ஏஜென்சீஸ்

32A, ஹெட்டன்பிளேஸ், கொழும்பு.

**சிங்கப்பூரில்**
**பணிப்பெண்களுக்கு**
**வேலைவாய்ப்பு உண்டு**

விபரம்:-

ஆங்கிலம் ஓரளவுக்குத் தெரிந்திருத்தல் வேண்டும்.
வயது 20 தொடக்கம் 30 வரை.
தங்குமிடம், உணவு யாவும் இலவசம்.
இரண்டு வருட ஒப்பந்தம்.
சம்பளம்- மாதம் S$ 200(ரூபா3200/-)
ரூபா 2,700/- மட்டும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டும்.

தொடர்பு கொள்க:-

A. K. சிவஞானம்
171 A, பிறவுண் ரோட்,
யாழ்ப்பாணம்.

Lab. Licence No 585
Approval No 585/1/88. (5019)

## HOUSE MAIDS SINGAPORE

VACANCIES: 20 NOS.
SALARY: S. DOLLOR 160-200
WITH DAY OFF PER FORTNIGHT
AGE: 20 - 35 YRS.
SEND BIO - DATA WITH PHOTOCOPY OF PASSPORT AND 5 PASSPORT SIZE PHOTOS

**S. Yogaratnam**
96, ஆடியபாத வீதி,
கேணியடி,
திருநெல்வேலி வடக்கு. (5222)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
திருமதி. தங்கசிரோன்மணி சிவமூர்த்தி

தோற்றம்: 1939 - 12 - 11
மறைவு: 1988 - 6 - 12

உங்கள் ஆத்மா சாந்தியடைய எந்நாளும் இறைவனை வேண்டுகின்றோம்.

திருகோணமலை இல. 101/2 வில்லூண்டி கந்தசுவாமி கோவில்வீதியில் அமைந்து இருக்கும் எமது இல்லத்தில் 12/7/1988 செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறவிருக்கும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்புள்ள
**கணவர், பிள்ளைகள்.**

தங்கவாசா,
வில்லூரண்டி கந்தசாமி கோவில் வீதி,
திருகோணமலை. (5215)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ் இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த லண்டனில் பிரஜா உரிமையுடன் சொந்த வீடும் நிதி வசதியும் உள்ள நற்பண்புகளுடன் கூடிய விவாகரத்துச் செய்து 7 வயது ஆண் குழந்தையுடைய கணக்காளர் ஒருவருக்கு நற்குணமும் ஆங்கில அறிவும் உடைய லண்டனில் வதிய விரும்பும் அத்தம், திருவாதிரை, கார்த்திகை, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்த மணமகள் விரும்பத்தக்கது. மணமகன் மெலிந்த 5 அடி 4 அங்குல உயரமும் உதயத்தில் செவ்வாயும் உடையவர். சாதகக் குறிப்பு மற்றும் முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

C/O 269, உதயன், யாழ்ப்பாணம்.

(5187)



## BECON

156, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)

**90 A/L**

**விஞ்ஞானம்**
சனி, ஞாயிறு வகுப்புகள்

| | |
|---|---|
| தூயகணிதம் | நல்லையா |
| பிரயோககணிதம் | நல்லையா |
| பௌதிகவியல் | மணியம் |
| இரசாயனம் | பிரபல ஆசிரியர் |
| விலங்கியல் | தம்பிராஜா |
| தாவரவியல் | பிரபல ஆசிரியர் |

ஆரம்பம்
16 - 7 - 1988
சனி 8. 00 a. m

(C 5676)



## Personal Classes A/L 90 Batch

ஆரம்பம் 13-7-88

| | |
|---|---|
| Chemistry | சண்முகசுந்தரம் |
| Physics | சோதிலிங்கம் |
| Applied | வெக்டர் |
| Pure | வேலாயுதம் |
| Botany | குணசிலன் |
| Zoology | கேதீஸ் |

230, நாவலர் ரோட்,
ஆனைப்பந்தி,

(C 5721)


# எரிபொருள் விநியோகத்தில் கண்டிப்பான நடைமுறை

## விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 10

வடக்கில் தனிப்பட்ட முறையில் எரிபொருள் சளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள் தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சில கண்டிப்பான நடைமுறைகளை அமுல் செய்யும்

பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது வடபகுதிக்குத் தேவையான எரிபொருள்களில் நாற்பது சதவீதமான எரிபொருள்களையே பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விநியோகிக்க முடிகிறது.

இதனால் முகவர்கள் மதவாச்சிக்கு சென்று எரிபொருள் எடுத்து வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுதாபனஎரிபொருள்மிகச் சொற்ப அலவே தனியார் நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன.

வெளியே இருந்து கொண்டுவந்து விற்பனை செய்யப்படும் எரிபொருள்களை பெற்றோலியக் கூட்டுத்தாபனக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்க வேண்டியது இல்லை. அதிகரித்து விற்பதற்கு தனியார் விற்பனவு நிலையங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆனல் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து கொள்முதல் செய்யும் எரிபொருள்களை கட்டுப்பாட்டு விலையிலேயே தனியார் எரிபொருள் நிலையங்கள் விற்க வேண்டும்.

வெளியில் இருந்து எரிபொருள்களைக் கொண்டுவரும் தனியார் நிலையங்கள் இங்கு பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள்களையும் வாங்கி கட்டுப்பாட்டு விலைக்கு மேலால் விற்பனை செய்வதைத் தடுப்பதற்கே பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்த நடைமுறைகளைக் கடைப்பிடிக்க இருக்கிறது.

இதன்படி தனியார் எரிபொருள் நிலையங்களுக்குக் கொண்டுவரப்படும் எரிபொருள்கள் விற்பனை நிலையத்தில் வைத்து முற்று முழுதாக விற்பனை செய்யப்பட்டதன் பின்பே அந்நிலையங்கள் கூட்டுத்தாபனத்திடம் எரிபொருளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

கூட்டுத்தாபனத்தில் இருந்து எரிபொருள் வழங்க முதல் கூட்டுத்தாபன பரிசோதகரினல் எண்ணெய்க் குதம் பரிசிலிக்கப்படும். அதன் பின்னரே அவருக்கு கூட்டுத்தாபனம் எரிபொருளை வழங்கும்.

கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் எரிபொருளை எந்தவிதகாரணமுமின்றி அதிகரித்த விலைக்கு தனியார் நிலையங்கள் விற்க முடியாது.

## முன்னள் ராணுவ அதிகாரி கொலை!

திருகோணமலை ஜூலை10

கிண்ணியா உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஆலங்கேணி என்னும் தமிழ் கிராமத்தில் பல வருடங்களாக வாழ்ந்து வந்த முன்னள் இராணுவ அதிகாரியான கப்டன். கே. சரவணமுத்து (82 வயது) என்பவர் இனந்தெரியாத நபர்களினல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

(இ-150)

## போரூட் உதவி

தொண்டமனறு மீனவர்களுக்கு போரூட் ஸ்தாபனம்மீன்பிடி வலைகளை வழங்கியது

680ரூபா பெறுமதியான 100 வலைகள் அண்மையில் போரூட்டின் யாழ்ப்பாணப் பிரதிநிதி எஸ். ஆனந்தராஜன் மூலம் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. (இ 160)

## பலாப்பழம் பறிக்கச் சென்றவர் மீது சூடு!

யாழ்ப்பாணம், ஜூலை10

பாலப்பழம் பறிக்கச் சென்றோர்மீது இந்திய அமைதிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகச் சொல்லப்படுகிறது, அதில் ஒருவர் காயமடைந்தார்.

அடம்பன் பகுதியில் இச் சம்பவம் நடந்தது. செல்லத்துரை வீரய்யா (வயது 22) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்

இவர் யாழ் ஆஸ்பத்திரியில் இப்போது சேர்க்கப்பட்டுள்ளார்.

காயம் அடைந்தவரை அமைதிப்படையினர் தமது வாகனத்தில் ஏற்றி அடம்பன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர். பின்பு அவர் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டார்.

காயமடைந்தவருக்கு செலவுக்காக படையினர் 200 ரூபா பணமும் கொடுத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகம் தவறுதலாக இடம் பெற்றதாகவும் சொல்லப்பட்டது. (இ-10)

## முறைப்பாடுமூலம் ரூ.30,000 வசூல்!

யாழ்ப்பாணம் ஜூலை 10

முறைப்பாட்டுப் பிரதிகள் மூலம் யாழ் பொலீஸ் நிலையத்துக்கு முப்பதினயிரம் ரூபாவுக்கு மேல் வசூல் கிடைத்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினல் அல்லது வேறு சம்பவங்களினல் பாதிக்கப்பட்ட மக்கள் தமது முறைப்பாடுகளைத் தயாரித்து இரண்டு பிரதிகளை யாழ். ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் ஒப்படைத்து வந்தனர்.

பொலீஸ் உயரதிகாரிகளினல் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு பிரதி பொதுமக்களிடம் வழங்கப்படும் பொழுது பிரதி ஒன்றுக்கு இரண்டு ரூபா வீதம் வசூலிக்கப்படுகிறது.

இதுவரை பதினையாயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகள் யாழ் பொலீஸ் பிரிவுக்குக் கிடைத்துள்ளன.

அவற்றின் மூலம் பொலீஸ் நிலையத்துக்கு முப்பதினயிரம் ரூபாவுக்கும் அதிக தொகை வசூலாகி உள்ளது.

(ஓ-10)

## கூட்டுறவுப் பணியாளருக்கு சம்பள உயர்வு

கொழும்பு, ஜூலை10

கூட்டுறவுத் துறை பணியாளருக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் திட்டம் ஒன்றை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

கூட்டுறவுத் துறை அமைச்சர் இத்திட்டத்தை அரசுக்கு கடந்த ஏப்ரலில் சமர்ப்பித்து இருந்தார்.

இம்மாதத்தில் இருந்து சம்பள உயர்வு கூட்டுறவுப் பணியாளருக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப் படுகிறது.

சம்பள உயர்வை வழங்கக்கூடியதாக நிதி வசதியற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு மான்ய உதவியை அளிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

(எ)

## காலஞ்சென்ற அதிபரின் சேவை குறித்து பாராட்டு

கோப்பாய் ஜூலை 10

அதிபர்கள் முதன்மை பெற்றவர்கள் அவர்கள் பாடசாலைக்கு முன்வந்து சடமைபுரிந்து பின் செல்பவர்கள் இந்த வரிசையில் முதன்மை பெற்றவர் அமரர் திரு. மு. நல்லையா.

பிரதம கல்வி அதிகாரி திரு. கந்தசாமி மேற்கண்டவாறு கூறினர்.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலையின் அதிபராக இருந்து காலமான திரு. மு. நல்லையாவின் அஞ்சலி வைபவத்தில் அமரரின் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்து திரு. கந்தசாமி உரையாற்றினர்.

மேற்படி பாடசாலையும் பாடசாலை அபிவிருத்திக் குழுவும் இணைந்துஎடுத்த இந்த நிகழ்ச்சிக்கு பாடசாலையின் அதிபர் திரு. நா. நாகராசா தலைமை வகித்தார்.

இந்த அஞ்சலி வைபவத்தில் கோப்பாய் கொத்தணி அதிபரும் வடமாகாண அதிபர்கள் சங்கச் செயலாளருமாகிய திரு. பூ. க. இராசரத்தினமும் உரை ஆற்றினர். (சி-.2)

## திறக்கப்படவில்லை

மட்டக்களப்பு ஜூலை 10

மட்டக்களப்பு பிரசைகள் குழுத்தலைவர் வணபிதா சந்திரா பெர்ணண்டோ படுகொலைச் சம்பவத்தின்பின்பு மூடப்பட்ட எகெட், கிழக்கிலங்கை புனர்வாழ்வுக் கழகம் என்பன இதுவரை திறக்கப்படவில்லை

மட்டக்களப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு, நிவாரணம் வழங்கப்படுவதில் மேற்படி அரசசார்பற்ற அமைப்புகள் முன்னணி வகித்து வந்தன.

(இ - 51)

## கூட்டணியின்

# ஒற்றுமை முயற்சிக்கு இயக்கங்கள் வரவேற்பு

மட்டக்களப்பு, ஜூலை10

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் இயக்கங்களிடையே ஒற்றுமை ஏற்படுத்த தற்போது மேற்கொண்டுவரும் முயற்சிகளை தாம் வரவேற்பதாக மட்டக்களப்பிலுள்ள ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ். வட்டாரங்கள் தெரிவித்தன.

ரெலோவட்டாரங்கள் இது பற்றி தெரிவிக்கையில், ''த. வி. கூ. மட்டுமல்ல எவராவது இயக்க ஒற்றுமையை ஏற்படுத்த முன் வருவார்களானல் அதனை வரவேற்பது மட்டுமன்றி பூரண ஒத்துழைப்பும் நல்குவோம்'' என்றன.

புளொட் வட்டாரங்கள் தெரிவிக்கையில் 'இயக்கங்களிடையே ஒருமித்த கருத்து என்றும் தேவை. இதற்கென இயக்கங்கள் ஒன்றுபடும் முயற்சி மேற்கொள்ளப்படுவதை வரவேற்கின்றோம்'' என்றன.

ஈ. பி. ஆர். எல். எவ். வட்டாரங்கள் தெரிவிக்கையில் ''த. வி. கூ. எடுத்துள்ள இந்நடவடிக்கை சிறந்ததொரு நடவடிக்கையாகும்'' என்றன.

இது இவ்வாறிருக்க த. வி. கூ. வட்டாரங்கள் இவ்விடயம் குறித்து தெரிவிக்கையில் ''சகல தமிழ்க் குழுக்களும் இணைந்து செயல்படும் போதுதான் தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்கும். முன்னணி வகித்து செயல்படும் பொறுப்பை இயக்கங்களிடம் ஒப்படைத்துவிட்டு நாம் பின்நின்று செயல்படுவதே எமது குறிக்கோள்'' என்றன. (இ-21)


## சவூதி பிரயாண ஒழுங்கு

எயர்போட் கிளீனர்ஸ்
சம்பளம் 450 றியால்
சாப்பாடு இடவசதி இலவசம்: Over Time
பணிப்பெண் தேவை.
பாஸ்போட் செய்து கொடுக்கப்படும்.
**M. கனகரட்ணம்,**
9C நந்தாவில், கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

(5209)


## அமைச்சு அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை10

கொழும்பில் உள்ள புனர்வாழ்வு அமைச்சின் அலுவலகம் இடம் மாற்றப்பட்டுள்ளது.

இது வரை காலமும் யோக் வீதியில் இயங்கி வந்த புனர்வாழ்வு அமைச்சு அலுவலகம் தற்பொழுது சேர்சிற்றம்பலம் மாவத்தையில் இயங்குகிறது.

நிவாரணம், புனர்வாழ்வு புனர்நிர்மாணப் பணிகளுக்காக பிரஸ்தாப அமைச்சுடன் தொடர்பு கொள்வதாயின் புனர்வாழ்வு அமைச்சு தபால் பெட்டி இல 2210, யூ. பி. ரீ. ஓ. கட்டடம், சேர். சிற்றம்பலம் மாவத்தை கொழும்பு 2 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.


## Tomorrow's Building Technology Today... Builders!


MULTIBLOC

**INTRODUCING**

Dense Cement / Concrete Layer to Layer Closed Cavity Cellular Building Blocks.

Manufactured by

Minato Shirke Block Machine, developed by FRENCH - INDIA collaboration.



Take advantage of these benefits:-

- ★ MULTIBLOC with Pali-Aru sand you are assured of a very strong and durable Block for any type of Building construction.
- ★ With 'MULTIBLOC' you save on Cement, Steel, Time, Labour cost and quick construction, which is paramount for our region at present.
- ★ Due to the smooth and neat finish 'MULTIBLOC' requires little or no plastering
- ★ All specifications conform to BSS 2028c.
- ★ Ex Factory Prices of 'MULTIBLOC' Blocks range from Rs. 4/- upwards.

For further details on Types, Prices and uses contact:

**NORTH CEYLON SPUN PIPES CO.**
155th MILE, KANDY ROAD, KILINOCHCHI.

(C 5711)



இதோ!
உங்கள் பிரபல்ய போஷாக்கு நிறைந்த

# லீடா

முழு ஆடைப்பால்மா
வசதியான பக்கட்களில்




விநியோகஸ்தர்கள்,
**மில்லர்ஸ் லிமிடெட்**
த. பெ. இல: 100,
கொழும்பு - 1

400 கிராம் பககட் ரூ. 29/90
1 கி. கிராம் பக்கட் ரூ. 85/=
2 கி. கிராம் பக்கட் ரூ. 162/=

லீடா இப்பொழுது ஓர்குடும்பத்தின் அங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரவ புளியங்குளத்தில் ஆயுதமுனையில் கொள்ளை!

வவுனியா, ஜூலை10

கடந்த புதன்கிழமை இரவு வவுனியா வைரவப்புளியங் குளத்தில் ஆயுதபாணிகளான முகமூடி அணிந்த ஒரு கோஷ்டி, இரண்டு வீடுகளில் புகுந்து ரி. வி., டெக், தங்க நகைகள், ரொக்கப் பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த நில அளவைக் கண்ணுடிகள் என்பனவற்றைக் கொள்ளையடித்துள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரியவந்துள்ளதாவது;

புதனிரவு 8 மணியளவில் ரி. வி. பார்த்துக் கொண்டிருந்த வேளையில் வர்த்தகர் ஒருவரின் வீட்டினுள் முகமூடியணிந்த 5பேர் கொண்ட கோஷ்டி ஒன்று உட்புகுந்தது. ரி. வியின் சத்தத்தைக் கூட்டிய கோஷ்டியினர் வீட்டில் இருந்தவர்களை அறையினுள்ளே விட்டு குப்புறப் படுக்குமாறு பயமுறுத்தினர்.

வீட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் இருந்த சுமார் பத்துக்கும் மேற்பட்ட ஆண்களையும் ஒரே அறைக்கு துவக்கு முனையில் அழைத்து வந்து குப்புறப் படுக்கச்செய்து, அறைகளில் இருந்த பொருள்களைக் கொள்ளையடித்தனர்.

ஆசிரியர் ஒருவரின் பணம் 1600 ரூபா, தொழில்நுட்ப அதிகாரி ஒருவரின் சம்பளப்பணம் 1300 ரூபா, விருந்தினராக வந்திருந்த ஒருவரின் 500 ரூபா, மற்றும் மோதிரங்கள், மணிக்கூடுகள், பல்லாயிரக் கணக்கான ரூபா பெறுமதியான நிலஅளவைக் கண்ணுடிகள், உடைகள், ரி. வி. ஆகியவற்றை இக்கோஷ்டி கொள்ளையிட்டது. வீட்டுக்காரர் வைத்திருந்த ஒரு பைக்கட் சிகரெட்டைக்கூட அவர்கள் விட்டுவைக்கவில்லையாம்.

இதேபோல அருகிலிருந்த வீட்டினுள்ளேயும் புகுந்துவீட்டாரைப் பயமுறுத்தி ரி. வி., டெக் மற்றும் பெறுமதி மிக்க பொருட்களைக் கொள்ளையடித்துக் கொண்டு தலைமறைவாகியுள்ளார்கள்.

ஏ. கே. 47, சப்மெசின் துப்பாக்கிகள், வாள்கள் என்பனவற்றை இக் கொள்ளையர் வைத்திருந்தார்கள் எனக் கூறப்பட்டது.

[உ-164]


**MODERN EDUCATION CENTRE**

**KARAVEDDY**

G. C. E. (A/L) 90

ஆரம்பம்: 11- 07- 1988 பி. ப. 3 மணி

(5179)



**புதிய உயர் கல்லூரி**

**G.C,E. O/L**

**Day Classes**

**Evening Classes**

**ஆரம்பம்- 15 - 7 - 88**

காலை 8 மணி – மாலை 4 மணி

SPOKEN ENGLISH

With GRAMMAR

**BRITTO**

2 ஆம் பிரிவு ஆரம்பம்

விபரங்களுக்கு,

S. அருள்நங்கை

புதிய உயர்கல்லூரி

ஆரியகுளம் சந்தி,

யாழ்ப்பாணம்.

(C 5659)



**வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்**

**G.A.Q 89 APRIL**

**B.A 88 DECEMBER**

பிரிவு 2, துரித மீட்டல் ஆரம்பம்:

10. 7. 1988 மாலை 2 மணி

எமது ஆசிரியர் குழு:

பொருளியல்:- திரு. கிருஷ்ணனந்தன்

தமிழ்:- திரு. குழந்தை

இந்துநாகரிகம்:- திரு. காரை சுந்தரம்பிள்ளை

புவியியல்:- திரு. குணராஜா

அரசியல்:- திரு. மஃறூப்

முக்கிய குறிப்பு:

I பட்டப் படிப்பு மாணவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு

II இவ் ஆசிரியர்கள் எமது நிறுவனத்தில் ஒருங்கிணைந்து சிறப்பாகப் போதனைகளை நடத்துகின்றனர்.

**விக்னு டியூசன் சென்ரர்**

52, ஸ்ரான்லி ரோட்,

யாழ்ப்பாணம்.

(C. 5668)


திருமலை மாவட்டம்:

## ஆசிரியர் பற்றுக்குறை மற்றும் தளபாட தட்டுப்பாடு பிரச்சினைகள் தீரும்

திருகோணமலை ஜூலை10

திருகோணமலைமாவட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறை, தளபாடங்கள் தட்டுப்பாட்டுப் பிரச்சினைகள்விரைவில் தீரும்.

கல்வி அமைச்சின் செயலாளர் திரு.ஈ.எவ். விஜேமன்னே மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

கல்வி அமைச்சரின் செயலாளர் திரு.ஈ.எல். விஜேமன்னேயும் கல்விச் சேவை அமைச்சின் செயலாளர் திரு.எம்.பி.சி. சில்வாவும் திருகோணமலைக்கு வந்திருந்தனர்.

கடற்படைத் தளத்தில் ஒரு மாநாடும் நடைபெற்றது.

மாநாட்டில் கொத்தணிப் பாடசாலை அதிபர்கள், உயர் வகுப்பு பாடசாலை அதிபர்கள், கல்வி இலாகா அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதியர் ஆகியோர் கலந்து கொண்டனர். திருகோணமலையில் தற்போது நிலவும் பல குறைபாடுகளை கூட்டத்தில் கலந்து கொண்டோர் எடுத்துக் கூறினர்.

முக்கியமாக ஆசிரியர் பற்றுக்குறை தளபாடத் தட்டுப்பாடு ஆகிய விடயங்கள் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இவற்றை எல்லாம் செவிமடுத்த செயலாளர் திரு. விஜேமன்னே பின்னர் உரையாற்றும் போது குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்வதாகக் கூறி—

ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ள அலவன்ஸ்களைஉடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் ஆசிரியர் பற்றுக்குறை, தளபாடத் தட்டுப்பாடு நிவர்த்தி செய்ய முடியுமென்றும் அவர் உறுதி அளித்தார் (இ-150)

### இலவச புத்தகம் விநியோகம்

யாழ்ப்பாணம் ஜூலை10

நீர்வேலியில் வைத்து அமைதிப்படையினர் ஆசிரியர்களுக்கு இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றிய புத்தகமொன்றை இலவசமாக விநியோகித்து வருகின்றனர்.

நீர்வேலி ஊடாக சென்ற பயணிகள் வாகனங்களை மறித்த அமைதிப்படையினர், அவற்றில் யாராவது ஆசிரியர்கள் இருக்கிறார்களா என வினவினர்.

ஆசிரியர்களை இனம் கண்டு அவர்களிடம் இலங்கை இந்திய ஒப்பந்தம் பற்றிய புத்தகத்தைக் கொடுத்து, இவற்றை தங்கள் தங்கள் பாடசாலைகளில் சகல மாணவர்களுக்கும் வாசித்து விளங்கப்படுத்தும்படி அவர்கள் கூறினர். (உ-9)

## பெற்றோர் எமக்குக் கிடைத்த பெரும் ஈவு

### தந்தையார் தின விழாவில் உரை

யாழ்ப்பாணம் ஜூலை 10

''உன் தேவனுகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணு'' என்று யாத்திரகாமத்தில்கூறப்பட்டுள்ளது. இவைகளை நாம் பலமுறை வாசித்தும் கேட்டும் இருக்கின்றோம். இதன் அடிப்படையில் எம்மைப் பாதுகாத்து பராமரித்து, அறிவூட்டி, கண்டித்து அரவணைத்து வளர்க்கும் பெற்றோரை எமக்கு ஈவாகத்தந்ததற்கு நாம் இறைவனைத்துதித்துப் போற்றவேண்டும்.

அருள் திரு ஆனல்ட் இவ்வாறு கூறினர்.

நவாலி ஒய்வு நாள் பாடசாலையின் முதலாவது தந்தையார் தின விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அருள் திரு. ஆனல்ட் உரையாற்றினர்.

நவாலித்திருச்சபையில் ஐம்பத்தைந்து வருட காலம் தொடர்ந்து திருப்பணி புரிந்தவரும், முன்னுள் ஓய்வு நாள் பாடசாலை அதிபருமான காலம் சென்ற சதாசிவம்பிள்ளை சின்னப்பா ஆனல்ட்டுக்கு இந்த முதல் தந்தையார் தினஅஞ்சலி நடத்தப்பட்டது.

இவ்விழா நவாலி ஓய்வுநாள் பாடசாலை அதிபர் திரு. டபிள்யூ என் தேவகடாட்சம் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் பாடல்களும் இடம் பெற்றன. (இ-9)


**A/L 89**

**இரசாயனம்**

**சண்முகசுந்தரம்**

விபரம்:

230, நாவலர்வீதி,

ஆனைப்பந்தி.

[C 5723]



**A/L 89**

**பௌதிகம்**

**சோதிலிங்கம்**

ஆரம்பம்: 10-7-88

பி.ப 4. 00 மணி

230, நாவலர் வீதி,

ஆனைப்பந்தி.

(C 5722)


### நடமாடும் வைத்தியசாலை

வடமராட்சி, ஜூலை10

வடமராட்சி கிழக்கு மக்களின் நன்மைகருதி பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ணசாரதா ஆச்சிரமத்தினர் நடமாடும் வைத்தியசாலைச் சேவையை ஆரம்பித்துள்ளனர்.

முதற்கட்டமாக அண்மையில் செம்பியன்பற்று அரசினர்பாடசாலையில் டாக்டர் லலிதகுமார் தலைமையில் வைத்தியசேவை நடைபெற்றது.[உ-160]

## தேசிய சேவைகள் மன்ற அலுவலகங்கள் மீண்டும் வடபிராந்திய நிர்வாகத்தில்

கிளிநொச்சி, ஜூலை 10

யோன்புர நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளாதது போன்ற சில செயல்களால் வடபிராந்திய நிர்வாகத்திலிருந்து பிரிக்கப்பட்டு வடமத்திய பிராந்திய நிர்வாகத்தின்கீழ் இயங்கி வந்த கிளிநொச்சி, வவுனியா, மன்னுர், முல்லைத்தீவு மாவட்டங்களின் தேசிய சேவைகள் மன்ற அலுவலகங்கள் மீண்டும் வடபிராந்திய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

கடந்த 84-ஆம் ஆண்டு வடக்கிலிருந்து பிரித்தெடுத்த மேற்படி மாவட்ட அலுவலக நிர்வாகம் மீண்டும் இம்மாதம்1ஆம் திகதி முதல் வடபிராந்திய நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னுர், வவுனியா, ஆகிய மாவட்ட தேசிய இளைஞர்சேவை மன்ற நிர்வாகம் அனைத்தும் வடபிராந்திய உதவி இயக்குநர் திரு. என். நாகேந்திரனின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும்.

இதேவேளை கிளிநொச்சியில் கடந்த 13-ஆம் திகதி முதல் கொண்டு வரப்பட்ட சிவில் நிர்வாகத் தடையால் மூடப்பட்ட கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவை அலுவலகம் கடந்த 27-ஆம் திகதி முதல் திங்கள், வெள்ளி தவிர்ந்த மூன்று நாட்கள் இயங்குகின்றன. (இ-76)

### 2 ஆம் தவணை விடுமுறை

யாழ்ப்பாணம், ஜூலை10

ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சைகள் இம்மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாவதை முன்னிட்டு பரீட்சை நிலையங்களாக இயங்கும் சகல பாடசாலைகளும் 2 ஆம்தவணை விடுமுறைக்காக இம் மாதம் 22 ஆம் திகதி மூடப்படும்.

இதே வேளையில் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை நிலையங்களாக இயங்காத — ஆனல் ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்காக மூடப்பட்ட பாடசாலைகள் தொடர்ந்து இயங்கும்.

இந்தப் பாடசாலைகள் சாதாரண தரப் பரீட்சைக்காக மூடப்பட்ட வேலை நாட்களிற்காகத் தொடர்ந்து 10 நாட்கள் இயங்கிய பின்னர் விடுமுறைக்காக மூடப்படும்.

அனைத்துப் பாடசாலைகளும் ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும். (உ-9)

### விளையாட்டு கல்வியின் அங்கம்

மானிப்பாய், ஜூலை10

பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதை ஒரு கேளிக்கையாகவோ, களியாட்டமாகவோ, கருதிவிடக்கூடாது. கல்வியின் ஓர் அங்கமே விளையாட்டு. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதன் மூலம் திடகாத்திரமான உடலைப் பெற்று மாணவர்கள் தங்கள் கிராமத்துக்கும், நாட்டுக்கும் உழைக்க முன்வர வேண்டும்.

யாழ். கல்வித்திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மெய்வல்லுனர் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன், பாடசாலை அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் ஆகியோரும் உரையாற்றினர். [சி-90]

### விறகு வெட்டத் தடை

கிளிநொச்சி, விசுவமடு காட்டுப் பகுதியில் விறகு வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அமைதிப்படையினர் காட்டுப்பகுதிகளில் தேடுதல் நடத்திவருவதையடுத்தே இந்தத் தடைஉத்தரவு விடுக்கப்பட்டுள்ளதாக அறிய வந்தது.

இதன் காரணமாக விறகு ஏற்றும் லொறிகளும் விசுவமடுப் பகுதிக்குள் செல்வதும் நிறுத்தப்பட்டுள்ளது. (க-10)

### மல்லிமாராச்சிக்கு மீண்டும் இடம்

ஐக்கிய தேசியக்கட்சியின்செயற்குழுவில் திரு. வீரசிங்க மல்லிமாராச்சி மீண்டும்சேர்த்துக்கொள்ளப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

பிரதமர் பிரேமதாஸாவின் ஆதரவாளரான இவர் கொலன்னவை எம். பி. ஆவார்.

ஐ. தே. க. செயற்குழு புதிதாக நியமிக்கப்பட்டபோது இவர் தெரிவு செய்யப்படவில்லை. [உ-எ]


**45ஆம் நாள் நினைவஞ்சலி**

(05- 07- 88)

க. கனகசுந்தரலிங்கம்

(எட்றிச், வெள்ளை)

தாயின் மடியில் 06- 10- 1969 தாயக மண்ணில் 22- 5- 88

களத்தினிலே வேங்கையென வடிவெடுத்த
கள்ளமில்லா எங்கள் வெள்ளையனே!
சின்னஞ் சிறுவயதில் சிறுத்தையெனச் சீறிய நீ
நின்னுயிரை நிலத்துக்காய்ப்பலிகொடுத்தாய்
இறுதிவரை ஈழமே நம் தாகமென்று
உறுதிகுலையாது உரமோடு போரிட்டாய்!
புலிகள் ஒருபோதும் புல்லுத் தின்னுதென்று
புரியவைத்திடவோ புவிவிட்டுப் போய் விட்டாய்?
ஈழமக்கள் நாம் தவிக்கின்றோம்
தலைதாழ்த்தித் தருகின்றோம் நம் அஞ்சலிகள்
கண்ணீரில் கரையாது எம்சோகம் இதை
காலத்தால் விரட்டிடுவோம் காத்திருப்பாய்!

— உடுவில் நண்பர்கள்

(C 5724)



**7ஆம் மாத நினைவஞ்சலி**





தாயின் மடியில்: 27. 12. 1967 தாய்மண்ணின் மடியில்: 21. 12. 1987

லெப்ரினன்

**சேபஸ்ரியன் தேவராசா (காந்தன்)**

தாயின் மடியில்: 21. 11. 1968 தாய்மண்ணின் மடியில்: 21. 12. 1987

**க. ரவீந்திரன் (அப்ஸ்)**

வீர வேங்கைகளே! இலட்சிய புஸ்பங்களே உங்கள் இலட்சியம் நிறைவேறும் நாள் விரைந்து வந்து கொண்டிருக்கின்றது. உங்களது வீர சாதனைகளை உலகமறிந்து விட்டது. இலட்சியம் நிறைவேறும் நாளே உங்களுக்கு வணக்கம் செய்யும் நாளாகும்.

- நண்பர்கள்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**SCIENCE CENTRE**
KARAVEDDY
**G. C. E. (A/L) 90**
ஆரம்பம்: 11- 07- 1988
விஞ்ஞான பாடங்கள் மட்டும்
(5214)



**G.C.E. A/L- 1988**
**இலவச கருத்தரங்கும்,**
வினு- விடை வகுப்புகளும்
விஞ்ஞானம், வர்த்தகம், கலை பிரிவுகளுக்குரிய சகல பாடங்களுக்குமான கருத்தரங்கு எமதுநிறுவனத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நேர அட்டவணையை அலுவலகத்தில்பெற்றுக் கொள்ளலாம்.
**ஆரம்பம்: 11-07-1988**
பிரவேசம்: இலவசம்
BOND INSTITUTION
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
( C/ 5732 )



உ
சிவமயம்
**திருமண அழைப்பிதழ்**

அன்புடையீர்!

நிகழும் விபவ வருடம் ஆனி மாதம் 27ஆம் நாள் ( 11 - 7 - 1988 ) திங்கட்கிழமை ரோகிணி நக்ஷத்திரத்துடன் கூடிய காலை 11.14 தொடக்கம் 12.22 வரையுமுள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்த வேளையில்

திரு. அ. கண்ணுத்துரை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **மோகனதுரை(மோகன்)** Marine Radio Officer அவர்களுக்கும்

சங்கத்தானையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரத்தினதும் திருமதி சுந்தராம்பாளினது சிரேஷ்ட புத்திரியுமான திருநிறை செல்வி **சந்திரவதனு (வதனு)** அவர்களுக்கும்

பொற்கொல்லர் வீதி, சங்கத்தானையில் அமைந்துள்ள மணமகள் இல்லத்தில் திருமணம் செய்து வைக்கப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சுற்றமும் நட்பும் சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்,
சுபம்!

இ.:.து இரு வீட்டார் அழைப்பு (தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.)
தங்கள் நல்வரவை நாடும்,

திரு. அ. கண்ணுத்துரை அவர்களும் பாரியாரும்
இல. 880, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

திருமதி சோமசுந்தரம் சுந்தராம்பாள் அவர்கள்
[மதி ஜுவல்லரி,
கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்]
சங்கத்தானை சாவகச்சேரி.
(C 5719)



**விக்ஞ டியூசன் சென்ரர்**
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
**கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு**
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
**A/L 89** SAT, & SUN
புதிய பிரிவு ஆரம்பம்
10 - 7 - 1988 (8 - 00)
**ஆரம்பம் 16 - 7 - 1988 காலை 8 மணி**
**90ஆம்** ஆண்டுக்கான பிரிவுகள் ஆரம்பமாக உள்ளது.
பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| பொருளியல்: | திரு. கிருஷ்ணனந்தன் |
| தமிழ்: | திரு. குழந்தை, |
| கணக்கியல்: | திரு. வன்னியசிங்கம், |
| இந்து நாகரிகம்: | திரு. காரை சுந்தரம்பிள்ளை, |
| வர்த்தகவியல்: | திரு. லங்கா, |
| புவியியல்: | திரு. குணராஜா, |
| அளவையியல்: | திரு. சுப்பிரமணியம், |
| அரசியல்: | திரு. மஃறூப் |

முக்கிய குறிப்பு;- i. கலை வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினுல் ஒருங்கிணைந்து போதிக்கப்படும் ஒரே நிறுவனம்.
ii கலை, வர்த்தக வகுப்புக்கள் எமது நிறுவனத்தில் மட்டுமே சிறப்பாக நடைபெறும்.
**89ஆம்** ஆண்டுக்கான DAY CLASSES ஆரம்பமாக உள்ளது. (C 5608)


யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில்

# நிர்மாணக் கைத்தொழில் பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை10
நிர்மாணக் கைத்தொழில் பயிற்சி நெறிகள் மீண்டும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

உலக வங்கியின் அனுசரணையுடன் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் முன்னர் நடைபெற்று வந்த இப்பயிற்சி நெறிகள் கடந்தவருட இராணுவ அசம்பாவிதங்கள் காரணமாக நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

எனினும் கல்லூரி அதிபர் திரு. எஸ். இராசேந்திரா மேற்கொண்ட பெருமுயற்சி காரணமாக கடந்த திங்கட்கிழமை முதல் இப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேசன் பயிற்சி நெறியில் 30 மாணவர்களும், மரவேலை பயிற்சி நெறியில் 24 மாணவர்களும், மின்சார இணைப்பு பயிற்சி நெறியில் 15 மாணவர்களும், நீர்க்குழாய் பொருத்தும் பயிற்சி நெறியில் 15 மாணவர்களும் அநுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மாணவர்களுக்கு பத்து வாரங்களுக்கு தொழில் நுட்பக் கல்லூரியில் ஆரம்பப் பயிற்சி வழங்கப்படும்.

ஆரம்பப் பயிற்சியின் போது ஒவ்வொரு மாணவருக்கும் தினம் ஒன்றுக்கு 12 ரூபா வீதம் அலவன்ஸ் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் மாணவர் தொடர்ந்தும் வெளியிடங்களில் தமது பயிற்சியினைத் தொடர்வதற்காக உபகரணங்களும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியின் பயனாக ஏற்கனவே நூற்றுக்கணக்கானோர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். (இ-10)

# புனர்வாழ்வு அமைச்சின் உதவிகள் 4 கட்டங்களில்

மட்டக்களப்பு, ஜூலை10
வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த குடும்பங்கள் மீளக் குடியமரும் போது புனர் வாழ்வு அமைச்சின் உதவிகள் பின்வரும் அடிப்படையில் நான்கு கட்டங்களில் வழங்கப்படும்.

புனர்வாழ்வு அமைச்சினால் வெளியிடப்பட்ட திருத்தி அமைக்கப்பட சுற்றறிக்கை இவ்விவரங்களைத் தெரிவித்துள்ளது

அவையாவன: வீடுகள் அமைப்புக்கு அவசரமானியம் 7.500ரூபா அரசசார்பற்ற அமைப்பு மூலம் 7.500 ரூபா மொத்தமாக 15 ஆயிரம் ரூபா வீடமைப்புக்கு செலவு செய்யப்படும் தலா 15,000 ரூபா செலவை சில அரச சார்பற்ற அமைப்புக்கள் முழுமையாக வழங்கவும் முன்வந்துள்ளன.

மீளக் குடியமரும் போது சமையல் பாத்திரங்கள் உடு துணி வகைகள் கொள்வனவு செய்ய தலா 2.000 ரூபா

பொருளாதார வாழ்க்கையை வழமைக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு தலா 2.000 ரூபா

குடியமர்ந்து சில மாதங்கள் பின்பு தான் வழமையான பொருளாதார நிலை உருவாகும். அது வரை தற்போதைய வரட்சி நிவாரண திட்ட அடிப்படையில் நிவாரணம் உலக உணவு திட்ட அனுசரணையுடன் வழங்கப்படும்.

இடம்பெயர்ந்து மீளக் குடியமரும் சகலரும் இந்த உதவிகளைப் பெறலாம்

ஆனல் ஏற்கனவே நடைமுறையிலிருந்த திட்டத்தின் கீழ் இந்த உதவிகளைப் பெற்றிருத்தல் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளன. (இ-21)

## கொட்டும் மழையிலும் தேடுதல்

ஒட்டிசுட்டான் ஜூலை10
கடந்த வெள்ளிக்கிழமை கொட்டும் மழையிலும் இந்திய அமைதிப் படையினர் தேடுதல் வேட்டைக்கு முகாமிலிருந்து வெளியேறினர்.

ஒட்டிசுட்டான் முகாமிலிருந்து படையினர் வெளியேறி முத்துஐயன் கட்டு குளத்துக்கு அண்மித்த காடுகளையும் பழைய குடியிருப்புக்கிராமங்களையும் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர். (இ-113)

## சுடப்பட்டார்

கோப்பாய் ஜூலை 10
6 பிள்ளைகளின் தந்தையான முன்னாள் இ.போ. ச. சாரதியான சுப்பிரமணியம் வயது 60 என்பவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-72)

## பஸ் சேவை இல்லை!

கரவெட்டி, ஜூலை 10
நாகர்கோவில் - பருத்தித்துறை பஸ் சேவை சில நாட்களாக இடம் பெறுததால் அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள்மற்றும்பொதுமக்கள் பெரும் கஷ்டம் அடைகின்றனர். (இ-70)

## துப்பாக்கிச் சூடு!

வடமராட்சி ஜூலை 10
கடந்த வியாழக்கிழமை மாலை ஆறுமணி அளவில் தம்பசிட்டி வட இந்து மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் தம்மைக் கண்டு ஓடியதாகக் கூறப்படும் சில இளைஞர்களை நோக்கி அமைதிப்படையினர் துப்பாக்கிப்பிரயோசம் செய்தனர்என்று கூறப்படுகிறது.

இளைஞர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் சைக்கிள் பின்னர் எரிந்த நிலையில் காணப்பட்டன. (க-160)


**முதலாவது பிறந்ததின ★ வாழ்த்து ★**



**செல்வன் சந்திரலிங்கம் விமேஷ்**

கொக்குவில் மேற்கு சந்திரலிங்கம், நாகநந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வன் விமேஷ் இன்று (10-7-88) தனது முதலாவது பிறந்த தினத்தை மிகவும் குதூகலமாகக் கொண்டாடுகிறுர், விமேஷை அப்பா, அம்மா, அக்கா தர்சனு, அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, நியூசிலாந்தில் இருக்கும் பெரியப்பா குடும்பத்தினர், கனடாவிலிருக்கும் பெரியப்பா குடும்பத்தினர் மாமாமார், மாமிமார், ஜேர்மனியில் இருக்கும் பெரியமாமா, உடுப்பிட்டியில் இருக்கும் சின்னமாமா, சித்திமார், மச்சான்மார் மச்சாள்மார், மற்றும் உற்றுர், உறவினர்கள் யாவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றுர்கள். (5213)



**NEW MASTER INSTITUTE**
B. M. C. LANE, JAFFNA.
**90 A/L**
**WEEKEND CLASSES**
Chemistry - 7-30 a.m.
Physics - 8-30 a.m.
Botany - 9-30 a.m.
Zoology - 10-30 a.m.
Pure Maths- 9-30 a.m.
Applied ,, - 10-30 a.m.
(எமது வழமையான ஆசிரியர் குழு)
ஆரம்பம் :
**10 - 07 - 88 Sunday**
(C 5655)


வளர்முக நாடுகளின் பொருளாதாரம்

# தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பெரும் பிரச்சினை

## பேராசிரியர் உரை

யாழ்ப்பாணம் ஜூலை 10
இன்றைய காலகட்டத்தில் வளர் முகநாடுகளின் பொருளாதாரம் தேசியமட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தலையாய பிரச்சினையாக இருந்து வருகின்றது.

பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் மேற்கண்டவாறு கூறினர்.

பேராசிரியர் சோ. செல்வநாயகம் நினைவுப் பேருரை யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடை பெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு "அரசும் கருத்து நிலையும் அபிவிருத்தியும்- இலங்கை பற்றிய சில அவதானிப்புக்கள்" என்ற பொருள்பட பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் நினைவுப்பேருரை நிகழ்த்தினர்.

யாழ் பல்கலைக் கழக பதில் துணைவேந்தர். பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் இந்நிகழ்ச்சிக்கு தலைமைவகித்தார்.

பேராசிரியர் மேலும் கூறியதாவது:
வளர்ச்சி அடைந்தபொருளாதாரங்களைப்போலன்றி வளர்முகநாடுகளில் பொருளாதார அமைப்புகளும் அவற்றின் நிறுவன சார்பான ஒழுங்குகளும் முதிர்ச்சி அடையாத நிலையில் உள்ளன.

மேலும்அரசியல்அமைப்புகளும் அவற்றின் நிறுவன ஒழுங்குகளும் வளர்ச்சி அடையாத நிலையில் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

[illegible] அரசியல் அமைப்புகளின் தன்மைகளையும் அவற்றின் மாற்றங்களையும் விளங்கிக் கொள்வதில் காலனித்துவ ஆட்சியின் தாக்கங்கள், அவற்றிலிருந்து முக்கியமாக பொருளாதார, சமூககலாசார ரீதியில் விலக்கிச் செல்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் முதலானவை முக்கியம் பெறுகின்றன.

இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்தி அனுபவங்கள் இதனை நன்கு புலப்படுத்துகின்றன. இப்படி அவர் கூறினர்.

சிரேஷ்ட விரிவுரையாளர். எஸ். பாலச்சந்திரன் நன்றியுரை வழங்கினர். (இ-5)

பொது ஸ்தாபனங்கள்

## உதவுமாறு கோரிக்கை

கோப்பாய் ஜூலை10
கடந்த வருட அசம்பாவிதங்களின் போது குடிசை வீடுகள் முற்றாக எரியுண்டவர்களுக்கும் விதவைகளுக்கும் உதவுவதற்கு நிதி வசதி படைத்த பொது ஸ்தாபனங்கள் முன் வர வேண்டும்.

கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவின் நிருவாக சபைக் கூட்டத்தில் உரையாற்றிய குழுச் செயலாளர் மேற்கண்டவாறு வேண்டுகோள்விடுத்தார்.

இதனைத் தவிர கோழிப்பண்ணை வளர்ப்புத் திட்டம் ஒன்றை அமைப்பின் பெயரில் ஆரம்பித்து அதன் வருவாயில் வறியவர்களுக்கு உதவவும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இருபாலை ஆனைக் கோட்டை பஸ் சேவையை ஆரம்பிக்கும் படி வடபிராந்திய [illegible] மகஜர் அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.


வீடியோ துறையில் முன்னணி வகிக்கும்
எவர்விஷன் ஸ்தாபனத்தாரின் மற்றும் ஓர் அறிமுகம்
**சூரிய மின் சக்தி (Solar Power)**
வடபகுதியில் முதன் முதலாக சூரியனில் இருந்து மின்சக்தி பெறுவதற்கான அமைப்புகளை அறிமுகம் செய்து அமைத்துத் தருகின்றோம்.
**மின் வசதியற்ற பகுதிவாழ் மக்கட்கு ஒரு வரப்பிரசாதம்!**
- ★ வீடுகட்கான மின் ஒளி அமைப்புகள்
- ★ தொலைக்காட்சி, வானெலி மின் அமைப்புகள்
- ★ வீடு மற்றும் பண்ணைகட்கான தண்ணீர் பம்பு அமைப்புகள்
- ★ இதர மின் அமைப்புகள்

பராமரிப்புச் செலவு, இயங்கும் செலவு எவையுமில்லை
மப்பும் மந்தாரமுமாக இருந்தாலும் மின் வழங்கும்
10 வருட உத்தரவாதம் - 25 வருட சேவை.
அத்துடன் விசேட OSRAM மின்குமிழ் ஜெர்மன் தயாரிப்பு - 6000 மணித்தியாலத்திற்கு மேலான பாவனை. 40 வாட், 100 வாட் சாதாரண மின்குமிழ் தரும் ஒளியை 7 வாட், 20 வாட் சக்தியில் தரும்.
யாவும் அமைத்துக் கொடுக்கக் காத்திருக்கின்றுர்கள்
**எவர் விஷன் ஸ்தாபனத்தார்**
விவரங்கட்கு:-
**எவர் விஷன்**
21 A, மணிக்கூண்டு வீதி
யாழ்ப்பாணம்.
Branch:-
**எவர் விஷன்**
C/o. S. நித்தியானந்தன்
வட்டாரம் - 1, புங்குடுதீவு.
**சன் வீடியோ கொம்பிளெக்ஸ்**
பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு,கோப்பாய்.
(C 5734)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சயன்ஸ் சென்ரர்

சாவகச்சேரி

## 1990 (A/L) விஞ்ஞானம்

ஆரம்பம்: 11- 07- 88

திங்கள் மாலை 3 மணி

| | |
|---|---|
| தூயகணிதம் பிரயோக கணிதம் | திரு. நல்லையா |
| தவரவியல் | திரு. குகாதரன் |
| விலங்கியல் | திரு. தம்பிராசா |
| இரசாயனம் | திரு. மணியம் |
| பௌதிகம் | திரு. யோகானந்தா |

நிர்வாகி

SCIENCE CENTRE

CHAVAKACHCHERI

(5175)



**Diploma in Computer Programming Basic**

4 Months Weekends

Fees - மாதம் 250/-

Aptitude Test - 15-07-88

தேர்வுப் பரீட்சையில் அதிக புள்ளிகள் எடுக்கும் பரீட்சார்த்திக்கு Lady Lovelace Memorial Scholarship வழங்கப்படும்.

A Valuable Certificate will be issued at the end.

வெளிநாடு செல்பவர்களுக்கு மிக உகந்தது.

ஆரம்பம்:- 16-07-88

C. I. M. A, A. A. T, I. A. B. நடைபெறுகின்றன.

**School of Business Administration**

(O. L .R தேவாலயத்திற்கு மேற்குப் பக்கம்)

16, 3ஆம் குறுக்குத் தெரு,

யாழ்ப்பாணம்.

(C 5717)


# வவுனியா இளைஞர்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்கு போருட் உதவும்

வவுனியா ஜூலை 10

தடுத்து வைத்து விடப்பட்ட வவுனியா மாவட்ட இளைஞர்களின் புனர்வாழ்வுப் பணிகளில் உதவுவதற்கான நடவடிக்கைகளை போருட் நிறுவனம் மேற்கொண்டுள்ளதாகஅதன் வவுனியா பொறுப்பதிகாரி திரு. சண்முகம் தெரிவித்தார்.

விடுதலையாகியுள்ள இளைஞர்களில் விவசாய முயற்சிகளில் ஈடுபட்டுள்ள 400 பேருக்கு ஒரு ஏக்கர் உழுந்துச் செய்கைக்கென 10 கிலோ விதை உழுந்தும் இரசாயனப் பொருள்கள் மற்றும் நிலத்தைப் பண்படுத்துவதற்கெனப்பண உதவியும் வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதே வேளையில் வைத்திய கவனிப்பும் உதவியும் தேவைப்படும் 200 இளைஞர்களின் நிலைமை குறித்து ஆராயப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

முதலில் ஒரு வைத்திய குழுவினரை வவுனியாவுக்கு அழைத்து இந்த இளைஞர்களின் ஆரம்ப வைத்திய பரிசோதனைகளை நடத்துவது என்றும், மேல் வைத்தியம் தேவைப்படுவோரின் தன்மைகளுக்ேற்ப உரிய வைத்திய பரிசோதனைகள் மற்றும் வைத்திய கவனிப்புகளை கொழும்பில் வழங்குவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-164)

## மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் உற்சவ மாநாடு

காங்கேசன்துறை, ஜூலை.10

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை யொட்டி வழமைபோல் ஏற்பாடுகளை மேற்கொள்வதென வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுலகத்தில் இடம்பெற்ற மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

எதிர்வரும் 19 ஆம் திகதி மேற்படி ஆலய உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்த உற்சவ ஒழுங்குகள் பற்றி ஆராய வலி. வடக்கு உதவி அரச அதிபர் திரு. வை. இராசையா தலைமையில் விசேட மகாநாடு கூட்டப்பட்டது.

மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து.ஷண்முகநாதக்குருக்கள் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய ஆதீனகர்த்தா, பிரம்ம ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் மற்றும் சுகாதார அதிகாரிகள் கிராம சேவையாளர்கள், பொதுநல நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் மாநாட்டில் பங்கு பற்றினர்.

வழமைபோல் சுகாதார, போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் ஏற்பாடுகளை மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது. (இ-68)

## மன்னார் வைத்தியசாலை புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை10

மன்னார் ஆதார வைத்தியசாலையை புனரமைப்புச் செய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை சுவிஸ் அரசு தனது தூதுவராலயத்தினூடாக மேற்கொண்டு வருகின்றது.

கட்டிடங்களைப் புதுப்பித்தல், புதிய கட்டடங்களை அமைத்தல் ஏற்கனவே இருக்கும் கட்டடங்களை தரமுயர்த்துதல் என்பன இப் புனரமைப்பு நடவடிக்கைகளில் அடங்கும். [க-5]

## காலபோக நெற்செய்கை காப்புறுதிக்கு கட்டுப் பணம் செப்டம்பர் 30 க்கு முன்

மானிப்பாய், ஜூலை10

1988-89 கால போக நெற் காப்புறுதிக்கான கட்டுப்பணத்தை செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன் கட்டிமுடிக்குமாறு சகல நெற்காப்புறுதி அங்கத்தவர்களையும், கமத்தொழில் காப்புறுதிச் சபையின் யாழ். மாவட்ட பிராந்தியப் பணிப்பாளர் திரு சு. சிவகுரு கேட்டுள்ளார்.

விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் சேருவோர் தமது கட்டுப்பணங்களை எவ்வளவு முன்னதாக கட்டுகிறார்களோ அவ்வளவுக்கு நன்மையுண்டு.

முந்துவது நல்லது முந்திக் கட்டுபவர்களுக்கு கட்டுப்பணம் குறைவாக இருக்கும். அதே சமயம் பென்சன்தொகை கூடுதலாகக் கிடைக்கும்.

சகல விவசாயிகளும் கூடியவிரைவில் ஓய்வூதியத்திட்டத்தில் சேர்ந்து கொள்ளவேண்டும்.

இப்படி அவர் கேட்டுக் கொண்டார். (இ-90)

## சேவையை இலகுவில் மறக்க முடியாது

மானிப்பாய்- ஜூலை10

பல வகையான தாவரங்களைத் தமது வீட்டில் வைத்து வளர்த்து தாவரவியலுக்கே அடி அத்திவாரமாகத் திகழ்ந்த சாரி மாஸ்டரின் சேவை இலகுவில் மறைந்து விடககூடியதல்ல.

மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ் ரி. சாரியின் முதலாண்டு நினைவஞ்சலி உரையின் போது திரு. சி. பாலகிருஷ்ணன் இப்படிக் கூறினார்.

திரு. சாரியின் நண்பர்களால் நடத்தப்பட்ட இந்த பிரார்த்தனை கூட்டத்தில் வரவேற்புரை இரங்கலுரை நன்றியுரை இடம் பெற்றன. [இ-90]


இதோ! ஜீ. சி. ஈ. சாதாரண/ உயர்தர மாணவர்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்!

**"DUN FROST"**

தாபனத்தார் அளிக்கும்

குளிர்சாதனப் பெட்டிகள்

திருத்துவதற்கான ஆறு மாத காலப் பயிற்சி

வகுப்புகள் ஆரம்பம்: 18-07-88

தொடர்பு:

DUN FROST

21, Temple Road,

CHUNDIKULY. (5200)



அன்பர்கள்! ஆதரவாளர்கள்!! வாடிக்கையாளர்களுக்கு!!!

★ மீண்டும் எமது ஸ்தாபனமாகிய ★

"ஸ்ரீ பார்வதி அச்சகம்"

536, ஆஸ்பத்திரி வீதியில்

(ஆஸ்பத்திரி முன்பாக)

ஆரம்பித்துள்ளோம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

சி. ரவீந்திரன்

உரிமையாளர்.

(சி-5720)


மக்கள் முகம்

## சுன்னாகம் பிரசைகள் குழு

சுன்னாகம் பிரஜைகள் குழுவின் புதிய நிர்வாக சபைத் தெரிவு நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. மாணிக்கவாசகர், உபதலைவர்கள்: திருவாளர்கள் ஆர். இளையதம்பி, பீ. செல்வரத்தினம். கே. சிவசுப்பிரமணியம், எஸ், அமிர்தலிங்கம், எஸ், இராசா.

இணைச் செயலாளர்கள்: சட்டத்தரணி எஸ். பி. சிவஞானம், திரு. எம். செல்வராசா,

உதவிச் செயலாளர்: திரு. பீ. தேவராசா, பொதுசனதொடர்பு உத்தியோகத்தர்: திரு. சபா. புஷ்பநாதன், பொருளாளர்: திரு.கே. சுப்பிரமணியம்.

செயற்குழு உறுப்பினர்கள். திருவாளர்கள் இ. சுப்பிரமணியம், எஸ். தர்மலிங்கம், எஸ். குலசிங்கம். இ. மாணிக்கவாசகர், எஸ். செல்லத்துரை, என். யோகராசா, இ. காசிப்பிள்ளை, கே. யோகலிங்கம், எம். இராமலிங்கம், ஜே.ஆர். அல்பேட், பி. நந்தகோபாலன், ஏ.வி.ஞானரத்தினம். (இ-27)

## ஸ்கந்தா இளைஞர் கழகம்

கிளிநொச்சி ஜூலை 10

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் ஸ்கந்தா இளைஞர் கழக புனரமைப்புக் கூட்டம் அண்மையில் ஸ்கந்தபுரம் உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர் செல்வி எப். பெலிசிற் தலைமையில் நடைபெற்றது.

ஸ்கந்தபுரம் சனசமூக நிலையத்தில்நடைபெற்ற இக் கூட்டத்தில் தி. சிவனேசன் தலைவராகவும், செல்வி நா. நந்தினி செயலாளராகவும், செல்வி ச. ரஞ்சிதவதனி பொருளாளராகவும், தெரிவு செய்யப்பட்டனர். (இ-76)

உதைபந்தாட்டம்

## கலைதாசன் கேடயம் கலட்டி ஐக்கிய அணிக்கு

கரவெட்டி, ஜூலை10

கலைதாசன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தை கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் சுவீகரித்துக் கொண்டது.

மாரும்புலம் விளையாட்டுக் கழகம் நடாத்திய கலைதாசன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான வருடாந்த சுற்றுப் போட்டியில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியனானது.

இறுதிப் போட்டியில் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் வதிரி டயமன் விளையாட்டுக் கழகத்தை 2 - 1 என்ற கோல் வித்தியாசத்தில் வென்றது.

சிறந்த வீரருக்கான கிண்ணம் கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த செ. சுரேந்திரனுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த கோல் காப்பாளருக்கான விருதை கலட்டி ஐ.வி.கழகேகோல் காப்பாளர் ந. உதயகுமார் பெற்றுக் கொண்டார்.

## எம். ஆர். மணிவண்ணன் ஞாபகார்த்தப் போட்டி

காலஞ்சென்ற யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவன் 'எம். ஆர். மணிவண்ணன்' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 7ம்திகதி நடைபெறும்.

சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் வருடாந்தம் நடத்திவரும் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் 24 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. இவற்றில் 16 விளையாட்டுக் கழகங்கள் கால் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

எம். ஆர். மணிவண்ணன் சென்றலைட்ஸ்விளையாட்டுக் கழகத்தின் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரராக இருந்தார்.

இப்போட்டியில் வெற்றியீட்டும் விளையாட்டுக் கழகத்துக்கே இவ்வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

இவர் பிரான்சில் விபத்தொன்றில் மரணமானார்.

இவரின் ஞாபகார்த்தமாக பிரான்சில் உள்ள திரு. எம். விஜயலிங்கம் என்பவர் மேற்படி வெற்றிக்கிண்ணத்தை வழங்கியுள்ளார். (இ-5)


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



திரு. கந்தசாமி மதியாபரணம்

(நிலந்தி லொறி உரிமையாளர்)

தோற்றம் 27-11-1946 மறைவு 27-5-1988

எமது குடும்பத்தில் ஒளிவிளக்காய், பாசத்தின் பிறப்பிடமாய், பண்பின் இருப்பிடமாய், நேசத்தின் கரங்களாய், மலரின் சுகந்தமாய், தேனின் இனிமையாய் இருந்து நன்நெறி காட்டி எம்மை எல்லாம் ஆதரித்து வளர்த்த அன்புத் தெய்வமே எம்மைவிட்டு அகன்று சென்றாலும் என்றும் எமது மனத்தை விட்டு அகலமாட்டீர்கள். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், தாய்,
சகோதரர்கள் மற்றும் உறவினர்கள்

புத்தூர் மேற்கு
புத்தூர். (5184)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 27 - 01 - 1929

மறைவு: 10 - 07 - 1987

திரு. குமாரசாமி ஏரம்பமூர்த்தி

(சுகாதாரப் பரிசோதகர்)

மண்ணில் எமக்கொரு மணிவிளக்கானீர்
விண்ணில் இன்னொரு தாரகை ஆனீரோ
கண்ணிற் பெருந்தலைவர் ஆன நீர் எமக்கு
எண்ணில் உமக்கு ஒப்புயர்வார் இங்கில்லை.
கண்ணன் அவன் எம்மிடையே வந்திருந்து
வண்ணமுறக் காக்கின்றான் எனக்களித்திருந்தோம்
பண்பில் மாயவன் அவன் செயல் போல்
கண்ணைத் திறந்து மூடுமுன் மாயமாய் மறைந்தீரே.
திண்ணமுடன் தொழில்புரிந்து ஒய்வுறும் கால் எம்படிப்பும் முடியும்
கண்ணை இமைகாப்பதுபோல் உமைப் பார்ப்போமென்ற
எண்ணத்தை மக்கள் மொழிந்திட்டால்
பெருமை மகிழ்வுடன் முறுவலிப்பீரே
சுண்ணக் கடன்கூட வைக்கவில்லையே
நடமாடும் தெய்வமாய் உடனிருந்து எமை அன்பால் ஆண்ட அப்பா
விடமுண்ட கண்டனுடன் சேர்ந்த இந்நாளில் உமை
பதமொன்று சொல்லி அஞ்சலித்தாலும் உமை
நிதமஞ்சலி செய்து ஒலித்திடும் எம் இதயநாதம்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

**மனைவி, மக்கள், உறவினர், நண்பர்கள்**

வியாபாரிமூலை,
பருத்தித்துறை. (5203)



## 5ஆவது ஆண்டு நினைவுதினம்



மரியாம்பிள்ளை பிரன்சிஸ்

[பிரபல வர்த்தகரும், பெர்ணதேத் ரூன்ஸ்போட், பரு.பிரான்சிஸ் வேக் சென்ரர் உரிமையாளரும்]

மலர்வு: 10-04-1910 உதிர்வு: 10-07-1983

ஆண்டு ஐந்து சென்றிடினும்
உம் நினைவு மறைந்திடுமோ
ஊர் போற்றும் நிலைக்செம்மை
உயர்த்தி வைத்த தந்தையே
உம் மக்கள் யாம் கலங்குகின்றோம்.

எம் அன்புத் தந்தையின் நினைவு கூரல் திருப்பலிகள் பேசாலை புனித. வெற்றி நாயகி ஆலயத்திலும் பருத்தித்துறை புனித. தோமையார் ஆலயத்திலும் 11-07-88 (திங்கள்) காலை 6-15க்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

'றேஸ்கொட்'
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

அன்பு மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(5190)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

**பொருள்:**

(முகம் கண் இவற்றின்) குறிப்புக்களால் உள்ளக்குறிப்பை உணர வல்லவரை நாட்டின் உறுப்புக்களுள் எதைக்கொடுத்தாவது துணையாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

10-07-1988 த. பெ. இல. 23


## எதற்கும் தேவை விதிமுறை

மாணவர்கள், ஆசிரியர்களை கண்ட கண்டவாறு கைது செய்வதற்கு கிளிநொச்சியிலிருந்து ஆட்சேபக்குரல் ஒலித்திருக்கிறது.

கிளிநொச்சி வட்டக்கச்சி மொத்தணிப் பாடசாலை யின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் சமூக சேவை ஸ்தாபனத்தினர் இணைந்து இந்த ஆட்சேபக்குரலை எழுப்பி இருக்கிறார்கள்.

அரசாங்க அதிபர் ஊடாக இந்திய அமைதிப் பொறுப்பதிகாரிக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் மாணவர்களையும், ஆசிரியர்களையும் கண்டபடி கைது செய்வது, விசாரணைக்கெனக் கூட்டிச் செல்வது என்பன குறித்துக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீருடை அணிந்து, அடையாளக் கார்ட்டுடன் பாடசாலை செல்லும் மாணவர்கள் கூட மறிக்கப்பட்டு நடுவீதியில் பல மணி நேரம் வெயிலில் தடுத்து வைக்கப்படுகின்றனர், அடையாளக் கார்ட்டுடன் பாடசாலை செல்லும் ஆசிரிய, ஆசிரியைகளுக்கும் அதே 'தண்டனை' வழங்ப்படுகிறது.

இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். மாணவர்கள், ஆசிரியர்கள் கண்ட கண்டபடி விசாரணைக்கு என்று கூட்டிச் செல்லப்படுவது, கைது செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும், இவை மகஜரில் வற்புறுத்தப்பட்டிருக்கும் முக்கிய விடயங்கள்,

அமைதியை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளின் பொருட்டு மாணவர்களைக் கைது செய்வது அல்லது விசாரணைக்கு அழைத்துச் செல்வது அல்லது நடுத்தெருவில் நிறுத்தி வைப்பது சாதாரண நிகழ்ச்சியாக இந்திய அமைதிப்படையினருக்குத் தோன்றலாம்.

ஆனால் அது அடிக்கடியும், கண்டபடியும் விதிமுறை எதுவும் இல்லாமலும் நடக்கும்போது அதன் விளைவு கல்வியையும், வருங்காலச் சமூகத்தையும் பெருமளவில் பாதிக்கும் என்பதை மறக்க முடியாது,

ஆசிரியர்கள், மாணவர்களை தகுந்த காரணங் காட்டாமல் கைது செய்யக்கூடாது. அவர்களை விசாரணைக்கு அழைத்துச் செல்லும்போது, சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கு காரணமும், கைது விவரமும் எழுத்து மூலம் அறிவிக்கப்படவேண்டும்.

அவற்றோடு, ஒருமுறை விசாரணைக்கு அழைத்துச் சென்று விடுவிக்கும் மாணவருக்கு அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை வழங்கி, அதன் பின்னர் வீதியில் நிறுத்தாது, விசாரணைக்குக் கூட்டிச் செல்லாது இருக்கப் பார்த்துக் கொள்வதும் அவசியமாகும்.

இவ்வாறு ஒரு விதிமுறை இல்லாவிடில் மாணவர்கள் காரண காரியமின்றிக் கைது செய்யப்பட்டால், அவர்கள் கல்வி பாதிக்கப்படும். நாளாந்தம் வீதிகளில் தடுத்து வெயிலில் நிறுத்தப்பட்டால் அவர்கள் மனநிலை பாதிக்கப்படும். பாடங்களை இழக்கவும் நேரிடும். அடிக்கடி அப்படி நடக்கும்போது மாணவருக்கு உளவியல் ரீதியான பாதிப்பு ஏற்படும் கல்வியில் உள்ள நாட்டம் குறைந்து விடலாம்.

இதனைத் தனிப்பட்ட மாணவருக்கு ஏற்படும் பாதிப்பு என்று கருதாமல், கூட்டுமொத்தமாகக் கணித்துப் பார்த்தால் முழு மாணவர் சந்ததியின் கல்வி வளர்ச்சியும் பாதிக்கப்படுவதை உணர்ந்து கொள்ளலாம்.

அந்தப் பாதிப்புப் பாரதூரமானதாகும். அது நிகழ்காலப் பாதிப்பு மட்டுமல்ல; எதிர்காலத்திலும், மிகப் பெரிய பரிமாணத்தில் சமூக, பொருளாதார அரசியல் பாதிப்புகளையும் ஏற்படுத்த வல்லது. ஏற்கனவே பல வழிகளாலும் பாதிக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழினத்தின் தலையில் ஓங்கி அடித்து, கீழே வீழ்த்தி விடுவதற்குச் சமனாகும்.

கல்வி கட்டாயமானது. மாணவர் உள்ளம் பிஞ்சானது. சிறிது நசுக்கினாலும் நஞ்சாகவல்லது. எனவே கல்வியும், மாணவர் மனமும் வெகு கவனமாகக் கையாளப்படவேண்டியவை, பேணப்பட வேண்டியவை.

# பிரிட்டனில் குடியேற புதிய கட்டுப்பாடு

## அடுத்த மாதம் அமுல்

லண்டன், ஜூலை 9

காமன்வெல்த் நாட்டுப் பிரஜைகள் பிரிட்டனில் குடியேறுவதைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டம் ஒன்று அடுத்த மாதம் கொண்டு வரப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இச்சட்டம் அடுத்தமாதம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று உள்துறை அமைச்சு தெரிவித்தது.

புதிய சட்டத்தின்படி

★ பிரிட்டனில் தங்கி வசிப்பதற்குத் தேவையான செலவுகளைத் தாங்களே பொறுப்பேற்பர் என்பதை லண்டனில் வந்திறங்கும் முன்னர் விண்ணப்பதாரர் நிரூபிக்க வேண்டும்.

★ பிரிட்டனில் தங்குவதற்கு இடவசதி இருக்கிறது என்பதை நிரூபிக்க வேண்டும்.

★ பிரிட்டனில் குடியேறுவதனை இலகுவாக்குவதற்காக திருமணஞ் செய்ய வரவில்லை என்பதை நிரூபிக்க வேண்டும். (எ)

### வெளி உலகில்

ஆப்கனில்

## கெரில்லாக்களுக்கு பாகிஸ்தான் உதவி; சோவியத் - இந்தியா கூட்டாகக் கவலை!

மாஸ்கோ, ஜூலை 9

ஆப்கன் கெரில்லாக்களுக்கு பாகிஸ்தான் அரசாங்கம் தொடர்ந்து இராணுவ உதவிகளை வழங்கி வருவது குறித்து சோவியத் யூனியனும் இந்தியாவும் கவலை தெரிவித்துள்ளன.

இந்திய ஜனாதிபதி இராமசாமி வெங்கட்ராமன் நேற்று மாஸ்கோ சென்றடைந்தார். அன்று இரவு அவருக்கு சோவியத் தலைவர் குரோமிகோவ் கிரெம்ளின் மாளிகையில் விருந்தளித்துக் கௌரவித்தார்.

அப்போதே முன்கண்ட கவலையை இரண்டு நாட்டுத் தலைவர்களும் வெளியிட்டனர்.

சோவியத் ஜனாதிபதி குரோமிக்கோவ் பேசுகையில் அணு ஆயுத பீதியற்ற உலக சமுதாயம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற புதுடில்லி பிரகடனத்தின்படி தான் சோவியத் யூனியன், அமெரிக்காவுடன் ஆயுதக் குறைப்பு ஒப்பந்தம் ஒன்றைச்செய்திருக்கிறது என்று சொன்னார்.

இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் பேசுகையில், ''ஆப்கன் கெரில்லாக்களுக்கு பாகிஸ்தான் அரசு தொடர்ந்து உதவுவது இந்தியாவுக்கு பெரும் கவலை அளித்துள்ளது. ஜெனிவா உடன்பாட்டின்படி பாகிஸ்தான் நடந்து கொள்ளவேண்டும்—'' என்றார். (எ)

## 150 சடலங்கள் மீட்பு!

திருவனந்தபுரம், ஜூலை 9

கேரள மாநிலத்தில் கடந்த வெள்ளி இடம்பெற்ற ரயில் விபத்தில் 150 சடலங்கள் ஆற்றில் இருந்து மீட்கப்பட்டன.

சுமார் 300பேர் இவ் விபத்தின்போது நீரில் மூழ்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

அவசர நிவாரண உதவிகளுக்காகப் பிரதமர் தனது நிவாரணநிதியில் இருந்து 20 லட்சம்ரூபா ஒதுக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## 'ஈரான் விமானத்தைச்சுட்டுவீழ்த்திய பாவத்தை வாழ் நாள் முழுவதும் சுமப்பேன்'

### அமெரிக்கக் கப்டன் அறிக்கை

நியூயார்க், ஜூலை 9

ஈரான் விமானத்தைச் சுட்டு வீழ்த்த உத்தரவிட்ட அமெரிக்கப் போர்க்கப்பல் 'வின்சென்ஸ்' ஸின் கப்டன் வில்ரோஜர்ஸ் ''தவறுதலாகச் சுட உத்தரவிட்டதற்கான பொறுப்பை என் எஞ்சிய வாழ்நாள் முழுவதும் சுமப்பேன்'' — என்று தெரிவித்திருக்கின்றார்

சென்ற ஞாயிறு இந்த விமானம் வளைகுடாவில் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதில் இருந்த 290 பயணிகளும் உயிரிழந்தனர்.

அதைத் தொடர்ந்து, கப்டன் ரோஜர்ஸ் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பித்த அறிக்கையில் தான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அறிக்கையின் சில பகுதிகளை மட்டுமே அமெரிக்கா பத்திரிகைகளுக்கு வெளியிட்டது,

''ஈரான் சண்டை விமானம் ஒன்று எனது கப்பலை நோக்கி வருகிறது என்று நான் எண்ணினேன்.

''எனது கப்பலையும் வீரர்களையும் காப்பாற்றவே விமானத்தைச் சுட்டுவீழ்த்தும்படி நான் உத்தரவிட்டேன். இது சம்பந்தமாக நான் எடுத்த முடிவுக்கு நான் மட்டுமே பொறுப்பு ஏற்கிறேன். சுட்டு வீழ்த்த உத்தரவிட்டதனால் வரும் அனைத்தையும் எஞ்சிய வாழ்நாள் முழுவதும் நான் சுமப்பேன்''—

இப்படி கப்டன் வில் ரோஜர்ஸ் தெரிவித்தார். (எ)

## வெளியேறும்படி உத்தரவு

ஜெருசலம், ஜூலை 9

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசத்தில் இருந்து பத்து பலஸ்தீனியர்களை வெளியேறும்படி இஸ்ரவேல் உத்தரவிட்டது.

இதனிடையில் மேற்குக் கரைப் பிரதேசப் பகுதியில் இஸ்ரவேல் இராணுவம் சுட்டதில் ஒரு பலஸ்தீனியர் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டது.

இரண்டு பலஸ்தீனியர் காயமடைந்தனர். (எ)

## 30பேர் பலி!

காபூல், ஜூலை 9

ஆப்கனிஸ்தானில் ஜலஹாபாத்துக்கு அருகில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் முப்பதுபேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## போர்முனை செல்லத் தயாராகுங்கள்!

### ஈரானியருக்கு அழைப்பு

தெஹ்ரான், ஜூலை 9

துப்பாக்கி ஏந்தக்கூடிய சகல ஈரானியரையும் போர்முனைக்குச் செல்லத் தயாராகும்படி ஈரான் இராணுவத் தலைமையகம் பணித்திருக்கிறது.

உடனடியாக அருகில் உள்ள ஆயுதப்படைத் தளங்களுக்குச் சென்று பெயர்களைப் பதிவு செய்யும்படியும் இராணுவத் தலைமையலுவலகம் ஈரானியருக்கு உத்தரவிட்டது.

ஈராக்குடனான யுத்தத்தை வெற்றிகரமாக முடிக்க ஈரானியர்கள் தேசப்பற்றுடன் போராடும் காலம் வந்து விட்டது என்றும் ஈரான் அறிவித்துள்ளது. (எ)

### சமய சந்நிதிகளில்

## குருநாத சுவாமி உற்சவம்

காங்கேசன்துறை குருநாதசுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமானது, தினமும் விஷேஷபூசை. உற்சவங்களுடன் தொடர்ந்து பத்துத்தினங்கள் உற்சவம் நடைபெற இருக்கிறது. (98)

## ஞானவைரவர் உற்சவம்

காங்கேசன்துறை ஜூலை 10

பிரசித்திபெற்ற வீமன்காமம் தலையிட்டி ஞானவைரவர் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 25 தினங்கள் உற்சவம் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ68)

## அலங்கார உற்சவம்

கோப்பாய், ஜூலை 10

கல்வியங்காடு இலங்கைநாயகி அம்மன் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது. 11 ஆம் திகதி பகல் சகஸ்ரமகா சங்காபிஷேகமும் 14 ஆம் திகதி நவக்கிரக அபிஷேகமும் இடம்பெறும்.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இவ் உற்சவத்தில் 19 ஆம் திகதி கடைசி நாளான அன்று வீதி உலா இடம்பெறும். (இ-72)

## சிவதீக்ஷை

கிளிநொச்சி, ஜூலை 10

கிளிநொச்சி மகாதேவ ஆசிரமத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆறு மணி தொடக்கம் சிவதீக்ஷை நடைபெறும்.

திருநெறிக்கழகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (இ)

## கார்மேல் ஆலய கொடியேற்றம்

குருநகர், ஜூலை.10

குருநகர், பரிசுத்த உத்தரிய (கார்மேல்) மாதா ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5. 45 மணிக்கு நடைபெறும். கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

15 ஆம் திகதி மாலை வெள்ளிக்கிழமை 6. 30 மணிக்கு திருநாள் நற்பலியுடன் சற்பிரசாத ஆராதனையும், பவனியும் நடைபெறும்.

16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6. 45, மணிக்கு திருநாள்பாடல் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மாலை 5. 30 மணிக்கு செபமாலையைத் தொடர்ந்து 6-மணிக்கு திருச் சொரூபபவனி நடைபெறும். (இ-51)

## கும்பாபிஷேகம்

காங்கேசன்துறை, ஜூலை.10

பழம் பெருமை வாய்ந்த வீமன்காமம் சேணியடி ஞான வைரவர் தேவஸ்தானபஞ்சகுண்டபுனராவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் இன்று 11 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

மறைவண்ணர் சிவஸ்ரீ து. மணிவண்ணக்குருக்கள் தலைமையில் குருமார்கள்கும்பாபிஷேக கிரியைகளை நடத்தி வைப்பார்கள். (இ-68)

## துறவிகளுக்கு வரவேற்பு

மட்டக்களப்பு ஜூலை10

இலங்கைக்கு வருகை தந்துள்ள இராம கிருஷ்ணமிசன் துறவிகளான ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வராநந்தாஜீ, ஸ்ரீமத் சுவாமி அஜராத்மாநந்தாஜீ ஆகிய இருவருக்கும் மட்டக்களப்பில் அண்மையில் பெரும்வரவேற்பு அளிக்கப்பட்டது.

மட்டுநகரில் இந்து இளைஞர் மன்றம், இந்துசமய விருத்திச் சங்கம் இணைந்து பொது வரவேற்பு வழங்கின. (இ 21)

# சிங்களவர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலைபெறும் தமிழர் உணர்வை நசுக்க முடியாது

### சிங்கள டாக்டர் ராஜீவுக்குக் கடிதம்

சிங்களவர்களின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறவேண்டும் என்ற தமிழரின் உணர்வை நசுக்கிவிட முடியாது.

பிரபல சிங்கள டாக்டர் பிரியன் செனவிரத்ன, இந்திய பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய கடிதத்தில் முன்கண்டவாறு தெரிவித்து உள்ளார்.

கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது:

நான் ஒரு சிங்கள டாக்டர். மருத்துவத் துறையில் பல பட்டங்கள் பெற்று ஆஸ்திரேலியாவில் பணிபுரிந்தாலும் இலங்கை அரசியலை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றேன்.

தமிழருக்கு பாகுபாடு காட்டாது அவர்கள் சம உரிமையுடன் வாழ்வதற்கு இலங்கை அரசை இந்தியா அரசு நிர்ப்பந்திக்கும் என்று எதிர்பார்த்தேன் ஏமாந்தேன்.

ஜெயவர்த்தனவுடன் நீங்கள் செய்துகொண்ட உடன்பாடு தெளிவில்லாதது, மேலோட்டமானது. அதனால் அமைதியை ஏற்படுத்த முடியாது.

நான் விடுதலைப் புலிகள் ஆதரவாளன் அல்லன். ஆனால் ஒன்று மட்டும் சொல்வேன், உங்களால் விடுதலைப் புலிகளை அடக்க முடியாது. ஒடுக்க முடியாது. கொண்ட குறிக்கோளுக்காக உயிரை விடவும் தயாராக இருக்கும் விடுதலைப் புலிகளிடம் ஆயுதத்தை முழுவதுமாக பறிக்க முடியாது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை கொலை செய்யும் அளவுக்கு உங்களிடம் ராணுவ பலம் உள்ளது. ஆனால் ஒன்று மட்டும் உறுதி, அதாவது சிங்களவர்களின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்ற தமிழரின் உணர்வை நசுக்கமுடியாது.

பிரபாகரனைத் தீர்த்துக் கட்டினால் அவரை விட வலிமைபெற்ற ஒரு தமிழன் தோன்றினால் உங்களால் என்ன செய்ய முடியும் ?

தனிப்பட்ட மனிதனைக் கொல்வதால் ஒரு இனத்தின் உணர்வைக்கொன்றுவிட முடியாது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முயற்சி செய்யாதீர்கள். அது பைத்தியக் காரத்தனம். ஈழத்தமிழருக்கு அதிகாரம் வழங்குவதன் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

உங்கள் தாயாரும் மறைந்த பிரதமருமான இந்திரா காந்தி, ஜெயவர்த்தனவின் சூழ்ச்சியைப் புரிந்து இருந்தார். அதை நீங்கள் உணரத் தவறி விட்டீர்கள்.

இலங்கையில் எழுந்து உள்ள தமிழர் – சிங்களவர் பிரச்சினையைத் தீர்க்க இந்தியா உண்மையான முயற்சியை எடுக்கவில்லை.

ஓயாது போர் வெபனன் நாடாக இலங்கையை மாற்றுவதற்கு முயற்சி நடக்கிறது

ஜெயவர்த்தனவுக்கு உதவுவதன் மூலம் இலங்கையை அழிக்க உதவாதீர்கள். அதன் மூலம் இந்தியாவுக்குக் கெட்ட பெயர் தேடாதீர்கள்.

இவ்வாறு கடிதத்தில் டாக்டர் செனவிரத்ன தெரிவித்திருக்கிறார். (எ)

### வாசகர் திருமுகம்

## ஓய்வூதிய அதிகரிப்பில் குறைபாடு

அண்மையில் சகல அரசாங்க உத்தியோகத்தருக்கும் திருப்தி அளிக்கும் வகையிலும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் அடிப்படையிலும் சம்பள வீதங்கள் அதிகரிக்கப்பட்டது அனைவருக்கும் தெரிந்த விடயம் ஆகும்.

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் இந்த அடிப்படையில் ஓய்வூதியம் அதிகரிக்கப்படுமென்று அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டபொழுது குறைந்த ஓய்வூதியம் பெறுபவர்கள் ஏதோ நன்மை ஏற்படப்போகின்றது என்று எதிர்பார்த்தனர்.

உண்மையில் உயர்மட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மட்டும் மிதமிஞ்சிய அதிகரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

உதாரணத்துக்கு ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகிறேன். முன்பு ரூபா 3000/- ஓய்வூதியம் பெற்றவருக்கு இப்பொழுது மாதம் ரூபா 1700/- அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ரூபா 1500/- வரை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஒரேமட்டமாக ரூபா 200/-மட்டும் கூட்டப்பட்டிருக்கிறது.

உயர்மட்ட ஓய்வூதியக்காரருக்கு அதிக சலுகை கொடுக்கப்பட்டு கீழ்மட்ட ஓய்வூதியக்காரருக்கு அதிகரிப்பு மிகவும் குறைவாக இருப்பது ஒரு பொருத்தமற்ற செயலாகக் கணிக்கப்படவேண்டியிருக்கிறது. இவ்விடயத்தை ஓய்வூதியத் திணைக்கள அதிகாரிகள் மீள்ஆய்வு செய்து ஆவன செய்யவேண்டுமென்பதை வற்புறுத்த வேண்டியதாக இருக்கிறது.

கீழ்மட்ட ஓய்வூதியம் பெறுபவர்கள் இந்த விஷயத்தை உடனடியாகக் கவனிக்க முன்வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ஜனநாயக சமதர்ம அரசமைப்பில் எமது நாடு இயங்குவதாகக் கூறிக்கொள்ளும் ஆட்சியாளர்கள் இவ்விடயத்தை உடனடியாகக் கவனிக்கவேண்டும். ஏழையை ஏழையாக்குவதும் பணக்காரனைப் பணக்காரனுக்குவதும் சமதர்ம கொள்கைக்கு முரண்பாடு கொண்டதென்பதையும் குறிப்பிடவேண்டியதாயிருக்கிறது.

யாழ்ப்பாணம். த. செ. ந. இரத்தினம்

## பாதயாத்திரை

சாவகச்சேரி ஜூலை 10

தென்மராட்சி திருத்தன 3 ஆம் ஆண்டுபாதயாத்திரை இம்மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

திவ்ய ஜீவன சங்கம் ஏற்பாடு செய்துள்ள இப்பாதயாத்திரை சாவகச்சேரி தெற்கு செருக்கல்பிள்ளையார்கோவிலில் இருந்து புறப்படும். நூற்றுக்கு மேற்பட்ட ஆலயங்களைத் தரிசிக்கும் இப்பாதயாத்திரை ஆகஸ்ட் 6 ஆம்திகதி முடிவடையும். (இ 31)

## புதிய அதிபர்

வேலணை ஜூலை 10

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையின் புதிய அதிபராக திரு. எம். கணேசலிங்கம் நியமிக்கப்பட்டார். (சி 167)

## மாகாணசபைக்கு உள்ள வழியை அரசு மூடப்பார்க்கிறது

### மஹரகம எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு ஜூலை 10

''அரசமைப்பின் 13 ஆவது சட்டப்படி. மாகாண சபைகளின் கீழ் உள்ள அதிகார விடயமாக நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்கும் போது மாகாண சபைகளின் இணக்கம் பெறப்பட வேண்டும். ஆனால் அரசு அவ்வாறு செய்யாமல் மாகாணசபைகளுக்கு உள்ள வழியை மூடப் பார்க்கின்றது.''

மஹரகம எம். பி. திரு. தினேஷ் குணவர்த்தன பல்கலைக்கழக திருத்தச்சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு மீது

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

✱ சேட்டிங் ✱ சூட்டிங்ஸ்
✱ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✱ றெடிமேட் ஆடைகளுக்கும்

யாழ்நகரில்

**மயூரா சென்ரர்**

13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.


# உதயன்

10 - 07 - 1988 ஞாயிற்றுக்கிழமை


திருமண வைபவங்களுக்கேற்ற
✱ மணிப்புரி
✱ காஞ்சிபுர ✱ பெனாரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

**மயூரா சென்ரர்**

13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.



உ
சிவமயம்

**உபநயன சுபமுகூர்த்த அழைப்பிதழ்**

அன்புடையீர்,

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான விபவவருஷம் ஆனி மாதம் 27 ஆம் நாள் (11- 7- 88) திங்கட் கிழமை திரயோதசி திதியும் ரோகிணி நக்ஷத்திரமும் அமிர்தயோகமும் சந்திர வோரையும் கூடிய சுபதினத்தில் காலை 6 00 மணிக்கு மேல் 7மணி 29 நிமிஷத் திற்குள்ளாக வரும் கடகலக்கின சுப முகூர்த்தத்தில்
எமது சிரேஷ்ட புத்திரன்

திருநிறை செல்வன்

**✱ சோமசுந்தர சர்மாவுக்கு ✱**

சௌள ஐக்ஞோபவீத தாரணம், பிரம்மோபதேசம், சமயதீக்ஷையும் செய்வதாய் ஸ்ரீ விநாயகப் பெருமான் கிருபையை முன்னிட்டு ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் திருவருளுடன் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன்வந்திருந்துசுபமுகூர்த்தத்தை நடாத்திவைத்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு.
14-7-88 வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் (நாச்சிமார்கோயில்) ஆலயத்தில் மேற்படி ஆலய பரிபாலன சபையாரின் ஆதரவுடன் வரவேற்புபசாரம் நடைபெறும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:
**ச. பா. பஞ்சாக்ஷரக் குருக்கள்**
பிரதம குரு
ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்
வண்ணை - யாழ்ப்பாணம்.

முகூர்த்தம் நடைபெறும் இடம்:
**சிவஸ்ரீ ச, பா. வைத்தியநாதக் குருக்கள்**
ஊரெழு- சுன்னாகம். (5020)


## கண்ணிவெடி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் உயிரிழந்தவர்களில் தச்சுத் தொழிலாளியான சண்முகநாதன் பொன்னையாவும் (60 வயது) ஒருவர். அவரது 12 வயது மகன் பொன்னையா சசிகுமார் துப்பாக்கிச் சூட்டினால் காயமுற்றார்.

படையினரின் தேடுதல் - துப்பாக்கிப் பிரயோகத்தில் மேலும் பலர் இறந்திருக்கலாம் என்றும், பலர் காயமடைந்திருக்கலாம் எனவும் அஞ்சப்பட்டது.

நேற்று நண்பகல் நடந்த இச்சம்பவத்தில் இறந்தோர் எண்ணிக்கை, காயமுற்றோர் எண்ணிக்கை குறித்துச் சரியான தகவல் எதுவும் இச்செய்தி எழுதப்படும் வரை கிடைக்கவில்லை. (அ-5-10)

## போர் நிறுத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்துபேசி ஒரு முடிவுக்கு வரலாம்.

ஆனால் பேச்சுவார்த்தை ஒருபுறமும், யுத்த நடவடிக்கை மறுபுறமும் நடக்கும்பொழுது சில சமயங்களில் விபரீதமான விளைவுகள் ஏற்படக்கூடும்.

இந்த விளைவுகள் தற்போதைய நிலையை மேலும் சிக்கலாக்கி விடலாம்.

மக்கள் மனதில் இந்தியர் தொடர்பாக எழுந்துள்ள அவநம்பிக்கையை நீக்கவேண்டுமாயின் இந்தியா உடனடியாக யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும்.

இதுவே தற்போதைய இணக்கமற்ற, ஸ்தம்பிதமான சூழ்நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்— என்றார்.

## மணிவிழா

யாழ்ப்பாணம், ஜூலை10

பேராசிரியர் 'நந்தி' யின் மணிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் உள்ள யாழ். மாநகரசபை அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் விழாவுக்கு 'தினகரன்' பிரதம ஆசிரியர் திரு. இ. சிவகுருநாதன் தலைமை வகிப்பார்.

## முல்லைத்திவு, வவுனி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாகிவிட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் கூறப்படும் செய்தியை வெறுமனே மறுப்பதில் எவ்வித பயனும் இல்லை.

இந்திய அரசு கூறுவது உண்மையானால்சர்வதேசப் பத்திரிகையாளர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரை இலங்கைத் தமிழர்பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்ய அனுமதிக்கத் தயாரா எனப் பிரதமர் ராஜீவிற்கு அறைகூவல் விடுக்கிறோம்.

இவ்வாறு இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-4)

## சுதந்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கவேண்டிய அவசியம் ஏற்படும்,

சுதந்திரக்கட்சி தான் பதவிக்கு வந்தால் தனது அமைச்சரவையில் மக்கள் விடுதலை முன்னணியினருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படும் என்று கூறும் அளவுக்கு முன்வந்திருப்பது எனக்கு வியப்பைத் தருகின்றது.

இப்படி திரு. ஜெயவர்த்தன தெரிவித்தார்.

## முல்லைத்தீவிலு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாரமும், மூன்றாவது வாரமும் மாத்திரம் கச்சேரியில் அத்தியாவசிய சேவைகள் இயங்க முடியும் என்றும் இரண்டாம் நான்காம் வாரங்களில் முழுமையாக கச்சேரி மூடப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல், காணிப் பிரிவுகளை நிரந்தரமாக மூடிவிடுமாறும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (இ-164)

## மாகாண---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் பேசிய போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. தினேஷ்குணவர்த்தன தொடர்ந்து பேசுகையில்மாகாணசபைகள் அமைக்கப் பட்டாலும். அவற்றின் அதிகாரங்களை அரசு மதிப்பதாக இல்லை. மாகாணசபைகளின் அதிகாரங்களை மூடி மறைத்தபடி அரசு செயல்படுகின்றது என்றார்.


**மணிக்குரல் வைசின் தர்மலிங்கம்**

மகிழ்ச்சியுடன் வழங்கும்

**உடனடிப் பிரயாண ஒழுங்குகள்**

✱ சவூதி அரேபியா ✱ குவைத்

சவூதி அரேபியாவிற்கு மிகவும் குறுகிய காலத்துக்குள் பிரயாணம் செய்வதற்குப் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

| | | | | |
|---|---|---|---|---|
| சமயற்காரர் | — | 600SR | உணவு இருப்பிட | வசதியுடன் |
| உதவி சமையற்காரர் | — | 500SR | ,, | ,, |
| மேற்பார்வையாளர் | — | 600SR | ,, | ,, |
| சாரதிகள் | — | 600SR | ,, | ,, |
| வெயிற்றர் | — | 300SR | ,, | ,, |
| களஞ்சியப் பொறுப்பாளர் | — | 600SR | ,, | ,, |
| சலவைத் தொழிலாளர் | — | 350SR | ,, | ,, |
| கொள்வனவு உத்தியோகத்தர் | — | 600SR | ,, | ,, |
| அலுவலகத் தொடர்பு இலிகிதர் | — | 700SR | ,, | ,, |
| கிளீனேர்ஸ் | — | 350SR | ,, | ,, |
| சுத்திகரிப்பாளர் | — | 325SR | ,, | ,, |

Al Kothary Company Saudi Arabia

| | | | | |
|---|---|---|---|---|
| General Cleaners | — | 600SR | உணவு இருப்பிட | வசதியுடன் |
| தச்சுவேலையாட்கள் | — | 600SR | ,, | ,, |
| மேசன் | — | 600SR | ,, | ,, |
| எலக்றீசியன் | — | 600SR | ,, | ,, |
| பூந்தோட்ட வேலையாட்கள் | — | 450SR | ,, | ,, |

குவைத் நாட்டிற்கும் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன, பிரயாணம் 1மாத காலத்துக்குள்.

| | | | | |
|---|---|---|---|---|
| தொழிலாளர் | — | 30KD | உணவு இருப்பிட | வசதியுடன் |
| கிளீனேர்ஸ் (ஆஸ்பத்திரி) | — | 30KD | ,, | ,, |
| சாரதிகள் | — | 60KD | ,, | ,, |
| மெக்கானிக் | — | 60KD | ,, | ,, |
| வீட்டுப் பையன் | — | 30KD | ,, | ,, |
| வீட்டுச் சாரதிகள் | — | 40KD | ,, | ,, |

விரும்புவோர் தாமதியாது உடன் கடவுச்சீட்டு, 6 படங்களுடன் நேரில் வரவும்.

**மணிக்குரலின் வைசின் தர்மலிங்கம்,**
ஏழாலை வடக்கு, ஏழாலை.
(5219)



**வெளிநிலைப் பல்கலைக்கழக கல்வி**

G.A.Q. 89 ஏரல்
B.A. 88 டிசம்பர்

**Day Class**

வேலைக்குச் செல்லாதோருக்கு மட்டுமே அனுமதி
திங்கள் முதல் வெள்ளி வரையிலான வார நாட்களில் வகுப்பு நடைபெறும்.

பொருளியல்
வரதராஜன் B.A. (Hons)
ஆரம்பம்: 11-07-88
(திங்கள்)
G.A.Q. 9.00 a.m.
B·A. 10.00 a.m.

**BECON**

156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
(C 5737)



ஒப்படைப் பாடத்திட்ட தொகுப்பு மதிப்பீட்டுக்குரிய
பிரத்தியேகக் கல்வி வாராந்த
**பயிற்சிப் பரீட்சை**

இலவசம்.
எமது நிறுவனத்தில் கல்விகற்காத ஆண்டு – 11 சகல மாணவர்களும் பங்கு பற்றலாம்.

கணிதம் - சனி - 4.00 - 5.00 P.M பரீட்சை
விஞ்ஞானம் - ஞாயிறு 4.00 - 5.00P.M பரீட்சை
கருத்தரங்கு
சனி - 5.00 – 6.00 P.M விஞ்ஞானம்
கருத்தரங்குஞாயிறு 5.00-6.00 P. M. கணிதம்

★ தொடர்ச்சியான பத்து மதிப்பீடுகளில் பாடம் ஒவ்வொன்றிலும் உயர்ந்த புள்ளிகள் பெறும் மாணவருக்கு 100/-(நூறு ரூபா) ரொக்கப்பணம் பரிசாக வழங்கப்படும்.

ஆரம்பம்: 16-07-1988

**BOND Institution**

58A , ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C5733)



**NEW MASTER INSTITUTE**
B. M. C. LANE, JAFFNA.

**90 A/L**

WEEKEND CLASSES

**கலை, வர்த்தகம்**

| | | |
|---|---|---|
| சின்னத்தம்பி | — | பொருளியல் - 8 a.m. |
| சந்திரராஜா | — | அளவையியல் - 9 a.m. |
| யோகராஜா | — | கணக்கியல் - 10 a. m. |
| தேவா | — | வர்த்தகம் - 11 a.m. |
| நாகேஸ்வரன் | | தமிழ் - 10 a. m. |
| | | இந்துநாகரிகம்-11 a.m. |
| கேசவன் | — | அளவையியல் - 12 noon |

ஆரம்பம்:
**10-07-88 Sunday**
(C 5654)



**QUICK Travels**

212, China Street,
COLOMBO-11.

துரித கெதியில் பாஸ்போட்
அதிதுரித கெதியில் விமான டிக்கட்
இந்தியா, சிங்கப்பூர்,இங்கிலாந்து, கனடா
மற்றும் எந்த நாடுகளுக்கும்
மற்றும்,
ஆண், பெண் இருபாலாருக்குமான வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கும்
தொடர்புகொள்க:

N. V. YOHANATHAN
QUICK TRAVELS
(5216)



**DIPLOMA IN HOME ECONOMICS CLASSES**

Cake Icing
Cookery
Dress Making
Flower Making
Hair Styling
Handi Crafts (Mackrame, Thread Work- Wool Work & Shell Work)
Glass & Fabric Painting
கோலம் போடுதல்

✱ பயிற்சி முடிவில் சிறப்புச் சான்றிதழும் வழங்கப்படும்-

புதிய வகுப்புக்கள்
ஆரம்பம்: 15- 07- 88

✱ தொழில் புரியும் பெண்கள் மற்றும் பாடசாலை மாணவிகளுக்காக ஞாயிறு வகுப்புக்களும் 24. 07. 88 முதல் ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு:-

KALALAYAAH
(School of Culinary & Fine Arts)
VICTORIA ROAD, JAFFNA.
(Near Subhas Tourist Hotel)
(C5712)


## DEATH NOTICE

### Mrs. Lily Rose Joseph

Mrs. Lily Rose Joseph beloved wife of Sylvester Joseph and loving mother of Sona, Shama, Delarne and Chutee expired on 9-7-88.

Funeral arrange ments will be notified later.

10 A. Old Park Road,
Jaffna.
(5221)

## மரண அறிவித்தல்கள்

### திரு. பெரியதம்பி நாகமணி

பெரியதம்பி நாகமணி காலமாகிவிட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், தவலிங்கம், சிவலிங்கம் (கனடா) நற்குணலிங்கம் (ஜேர்மனி) சுந்தரலிங்கம், ஓங்காரலிங்கம், சடாட்சரலிங்கம், தவசஸ்வரிதேவி, ரஞ்சனாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், நடராசா, (சுவிச்சிலாந்து) வனிதா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் ஞாயிற்றுக் கிழமை 10- 7- 88 4 மணிக்கு நயினாதீவில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தவலிங்கம்
(5226)

### கனகரத்தினம் மலர்விழி

(சசி)

கனகரத்தினம் மலர்விழி (சசி) 9- 7- 88 இல் அகால மரணமானார். இவர் கனகரத்தினத்தின் மகளும், காலஞ்சென்ற கனகரத்தினம் யோகத்தின் மகளும், மதன், சதீஸ் ஆகியோரின் சகோதரியும், கந்தையாவின் (பிரான்ஸ்) மருமகளும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 10- 7- 88 காலை 10 மணிக்கு ஈமக்கிரிகைக்காக வில்லூண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆயுள்வேத வைத்தியர்
த. செல்வரெத்தினம்
நாவாந்துறை.
(5227)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 10 - 07 - 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Sunday 10 th July 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org